BHOOTHA KANNADI Tamil Monthly

# பூத கண்ணாடி

மலர் 8 | இதழ் 6 | ஜூன் 2026 | புலனாய்வு தமிழ் மாத இதழ் | விலை ரூ.10/-



## தமிழக அரசியல் கட்சிகளுக்கு புதிய சவால்!

– அண்ணாமலை அதிரடி



## மேயர் பதவிய ஜெயிச்சா மீசைய எடுத்துடுறேன்!

– தவெகவுக்கு ஆர்எஸ் பாரதி சவால்

# மக்கள் நலனில் அக்கறையோடு தவெக அரசு!



SOMETHING NEW IS HERE!
STORIES THAT STICK.
VANAKKAM VELLORE
BHOOTHA KANNADI
@BHOOTHAKANNADI_CHEITHIGAL
SCAN TO FOLLOW
BHOOTHAKANNADI CHEITHIGAL
ON INSTAGRAM!
REAL STORIES
CURIOUS MINDS
THOUGHTFUL CONTENT
FOLLOW & BE PART OF THE JOURNEY!
@bhoothakannadi_cheithigal

# அச்சுறுத்தும் எல் நினோ...
# தற்காத்து கொள்ள...

2026 ஆம் ஆண்டில் பசிபிக் பெருங்கடலில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை வழக்கத்திற்கு மாறாக 2.0குசிக்கும் அதிகமாக உயர்ந்து "அதிதீவிர எல் நினோ" (Super El Niño) காலநிலை மாற்றம் உருவாகி வருவதாக உலக வானிலை அமைப்பு (WMO) எச்சரித்துள்ளது. இது தமிழ்நாட்டில் கடுமையான வெப்ப அலைகள், தென்மேற்கு பருவமழை குறைவு (வறட்சி அபாயம்) மற்றும் அதன் தொடர்ச்சியாக வடகிழக்கு பருவமழையின் போது திடீர் பெருவெள்ளம் போன்ற இருமுனை இயற்கை சவால்களை ஏற்படுத்தக்கூடும்.

இதனை எதிர்கொள்ள தமிழ்நாடு அரசும் மாவட்ட நிர்வாகங்களும் பல்வேறு முன்னெச்சரிக்கை மற்றும் மேலாண்மை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளன.

கோடை வெப்பத்தின் தாக்கத்தைக் குறைக்க பொது இடங்கள் மற்றும் சமுதாய நலக்கூடங்களில் உயிர் காக்கும் உப்புச் சர்க்கரைக் கரைசல் மற்றும் குடிநீர் தங்கு தடையின்றி வழங்கப்படுகிறது.

அரசு மருத்துவமனைகளில் ஆரம்பக்கட்ட மற்றும் பணி மருத்துவர்களுக்கு வெப்பத் தாக்கம் (Heat stroke) மற்றும் அதன் அறிகுறிகளை உடனடியாகக் கண்டறிந்து சிகிச்சையளிக்க சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

வறட்சி காலத்தில் நிலத்தடி நீர் மட்டம் குறைவதைத் தடுக்க ஏரிகள் மற்றும் நீர்நிலைகளைப் தூர்வாரும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. அத்தியாவசிய உணவுப் பொருட்கள் தாங்கல் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன.

மதியம் 12:00 மணி முதல் பிற்பகல் 3:00 மணி வரை தேவையற்ற வெளிப்புறப் பயணங்களைத் தவிர்க்கவும். தாகம் எடுக்காவிட்டாலும் அடிக்கடி போதிய அளவு குடிநீர் பருக வேண்டும்.

எலுமிச்சை சாறு, மோர், இளநீர், லஸ்சி மற்றும் நீர்ச்சத்து மிகுந்த பழங்களை (தர்பூசணி, வெள்ளரி) அதிகம் உட்கொள்ள வேண்டும். ஆல்கஹால், காஃபின் கலந்த பானங்கள் மற்றும் கார்பனேட்டட் குளிர்பானங்களைத் தவிர்க்க வேண்டும்.

பகல் நேரத்தில் வீட்டின் ஜன்னல்கள் மற்றும் திரைகளை மூடி வெப்பத்தை தடுத்து, இரவு நேரத்தில் காற்றோட்டத்திற்காக திறந்து வைக்கலாம். தலைச்சுற்றல், கடுமையான தலைவலி, மயக்கம் போன்ற வெப்பத் தாக்கத்தின் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அருகில் உள்ள அரசு மருத்துவமனையை நாட வேண்டும்.

அரசின் இத்தகைய பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பாராட்டுக்குரியது.

–ஆசிரியர்


**பூத கண்ணாடி**

புலனாய்வு தமிழ் மாத இதழ்

மலர் 8 | இதழ் 6 | ஜீன் 2026 | விலைரூ.10/

வெளியீட்டாளர் :

**M.கலைவாணி முருகன்** M.Sc., M.Ed.,

ஆசிரியர்

**GR.முருகன்** 9003006655

செய்தி ஆசிரியர்:

**ஸ்ரீ வேதாத்திரியன்** M.P.

துணை ஆசிரியர்:

**P.பிரபாகரன்**

**A. சிவகுமார்** B.com. B.L. மதுரை

தலைமை செய்தியாளர்கள்:

S.**சதீஷ்குமார்,**

P.R.**ஜெயக்குமார்**, S.**தனிஷ்**

செய்தியாளர்கள்

K.**பரத்**, A.**சுனில் குமார்,**

புகைப்படக் கலைஞர்கள்

C.**நித்தியானந்தம்**

சட்ட ஆலோசகர்கள்

M.**ஞானசேகரன்** B.A., B.L.,வேலூர்

M.**ஜெயசீலன்** M.Tech., L.L.B.,

சென்னை உயர்நீதிமன்றம்

பதிவு அலுவலகம்:

**BHOOTHA KANNADI**

எண்.3/74, சாலைத் தெரு,

திம்மணாசாரிகுப்பம் அஞ்சல்,

அரப்பாக்கம், வேலூர் மாவட்டம்

Cell: 9003006655

bhoothakannadi18@gmail.com

வடிவமைப்பு:

**ஆர்டிஸ்ட் ராஜா** 9840643963



இதழில் வெளியாகும் விளாம்பரங்களின்

உண்மைத் தன்மைக்கு

பூத கண்ணாடி நிர்வாகம் பொறுப்பல்ல.




# ரூ.271 கோடியில் தோல் தொழில்முனையம்:

## மத்திய அரசு அறிவிப்பு

ராணிப்பேட்டை, பனப்பாக்கத்தில் ரூ. 271 கோடி முதலீட்டில் தோல் மற்றும் அது சார்ந்த துணைப் பொருள்களுக்கான தொழில்முனையம் அமைக்கப்பட உள்ளதாக மத்திய அமைச்சக இணைச் செயலர் நிதி கேசர்வானி தெரிவித்தார்.

தமிழகத்தின் தோல் மற்றும் காலணித் துறை வளர்ச்சிக்கு மேலும் ஊக்கம் அளிக்கும் வகையில், ராணிப்பேட்டை மாவட்டம், பனப்பாக்கத்தில் ரூ.271 கோடி முதலீட்டில் தோல் மற்றும் அது சார்ந்த துணைப் பொருள்களுக்கான தொழில்முனையம் (கிளஸ்டர்) அமைக்கப்பட உள்ளதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சக இணைச் செயலர் நிதி கேசர்வானி தெரிவித்தார்.

தோல் மற்றும் தோல் அல்லாத துறைகளில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் தொழில் நிறுவனங்கள் நடத்துவதை எளிதாக்கும் சீர்திருத்தங்கள் குறித்த நிகழ்ச்சி

நுங்கம்பாக்கத்தில் உள்ள தனியார் விடுதியில் திங்கள்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்ற நிதி கேசர்வானி பேசியதாவது: நாட்டின் தோல் மற்றும் காலணித் துறையில் தமிழகம் தொடர்ந்து முன்னணி மாநிலமாக இருந்து வருகிறது. தமிழகத்தின் ராணிப்பேட்டை மாவட்டம், பனப்பாக்கம், பிகார், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம் ஆகிய இடங்களில் மொத்தம் ரூ.891 கோடி முதலீட்டில் தோல் மற்றும் அது சார்ந்த துணைப் பொருள்களுக்கான தொழில் முனையங்கள் அமைக்கப்பட உள்ளன.

குறிப்பாக, தமிழகத்தில் மட்டும் ரூ.271 கோடி முதலீட்டில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. உள்நாட்டு சந்தை தேவையையும், வெளிநாட்டு ஏற்றுமதி வாய்ப்புகளையும் கருத்தில் கொண்டு தோல் மற்றும் தோல் அல்லாத பொருள்கள் உற்பத்தியை விரிவுபடுத்தும் நோக்கில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை இந்தத் துறையில் ஒட்டுமொத்தமாக ரூ.2,000 கோடி முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிகழ் ஆண்டில் 2.25 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான தோல் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், தோல் அல்லாத பொருள்களின் ஏற்றுமதிக்கும் தற்போது முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. அடுத்த 5 ஆண்டுகளில் தோல் துறையின் மொத்த உற்பத்தியை இரட்டிப்பாக்குவது இலக்காக

நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார்.

தொடர்ந்து பேசிய மத்திய வர்த்தகத் துறை இணைச் செயலர் பெட்டல் தில்லான் கூறுகையில், நாட்டின் மொத்த ஏற்றுமதி மதிப்பு 20142015ஆம் நிதியாண்டில் 468 பில்லியன் டாலராக இருந்த நிலையில், 20252026ஆம் நிதியாண்டில் அது 863 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. தோல் பொருள்கள் ஏற்றுமதியில் இந்தியாவின் உற்பத்தித் திறன் வலுவாக உள்ளது.



பொம்மைகள், விளையாட்டுப் பொருள்கள் உள்ளிட்ட துறைகளிலும் ஏற்றுமதி வளர்ச்சி தொடர்கிறது. கடந்த நிதியாண்டில் இந்தியாவின் தோல் மற்றும் தோல் உற்பத்திப் பொருள்கள் ஏற்றுமதி 4.27 பில்லியன் டாலராக இருந்தது. இதில் அமெரிக்கா, ஜெர்மனி, பிரிட்டன், இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகள் மட்டும் 50 சதவீத பங்களிப்பை வழங்கியுள்ளது.

தோல் ஏற்றுமதியில் தமிழகம் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது. நாட்டின் மொத்த தோல் மற்றும் அது சார்ந்த ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு 37 சதவீதமாக உள்ளது என்றார். நிகழ்ச்சியில் தோல் பொருள்கள் ஏற்றுமதி கவுன்சில் நிர்வாகிகள் மற்றும் தொழில் துறையினர் கலந்து கொண்டனர்.

# கால்வாயில் குப்பை கழிவுகளை கொட்டகூடாது...

## – குடியாத்தம் நகராட்சி நிர்வாகம்

வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள 3 கிலோமீட்டர் நீளமுள்ள பாபுராவ் கசம் நீர்வரத்து கால்வாயைத் தூய்மைப்படுத்தும் பணியை குடியாத்தம் நகராட்சி நிர்வாகம் (Gudiyatham Municipality) மற்றும் நகராட்சி தூய்மைப் பணியாளர்கள் இணைந்து மேற்கொள்கின்றனர்.

குடியாத்தம் நகராட்சி ஆணையர், பொறியாளர் மற்றும் நகர்மன்றத் தலைவர் ஆகியோரின் நேரடி மேற்பார்வையில் இப்பணிகள் திட்டமிடப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றன. பொதுப்பணித்துறை (PWD): நீர்வரத்துக் கால்வாய்களின் முக்கியப் பகுதிகள் மற்றும் மதகுகளைப் பராமரிப்பதில் பொதுப்பணித்துறையின் நீர்வள ஆதார அமைப்பும் நகராட்சியோடு இணைந்து தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குகிறது.

ஆகாயத்தாமரை மற்றும் குப்பைகளை அகற்றுவதுடன், கால்வாயின் ஆழமான பகுதிகளில் உள்ள ஆகாயத்தாமரை மற்றும் தூர்வாரும் பணிகளுக்கு பொக்லைன் (JCB) இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பருவமழை காலங்களில் குடியாத்தம்




நகரப் பகுதிகளுக்குள் வெள்ள நீர் புகாமல் தடுத்து, நீர் தடையின்றி ஏரிகளுக்குச் சென்றடைய வழிவகை செய்யப்படுகிறது.

இந்த 3 கி.மீ நீளக் கால்வாயில் அடர்ந்து வளர்ந்துள்ள ஆகாயத்தாமரைச் செடிகள், முட்புதர்கள் மற்றும் நெகிழி (Plastic) கழிவுகள் முற்றிலும் அகற்றப்படுகின்றன.

இதனால் அப்பகுதியைச் சுற்றியுள்ள கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகளின் நிலத்தடி நீர்மட்டம் உயரும். கால்வாயின் தரைப்பகுதியில் படிந்துள்ள மணல் சரிவுகள் மற்றும் சகதிகள் அகற்றப்பட்டு கால்வாய் ஆழப்படுத்தப்படுகிறது.

தூய்மைப் பணிக்குப் பிறகு பொதுமக்கள் மீண்டும் இக்கால்வாயில் குப்பைகளையோ அல்லது கழிவுநீரையோ கொட்டக் கூடாது என்று நகராட்சி நிர்வாகம் மூலம் எச்சரிக்கையும் விழிப்புணர்வும் வழங்கப்படுகிறது.



# சவாலுக்கே சவாலான மாவட்ட ஆட்சியர் பிரியா ஐ.ஏ.எஸ்!

ராணிப்பேட்டை மாவட்டத்தின் புதிய மாவட்ட ஆட்சியராக திருமதி என்.பிரியா ரவிச்சந்திரன், ஐ.ஏ.எஸ் (N. Priya Ravichandran, IAS) அவர்கள் 1 ஜூன் 2026 அன்று முறைப்படி பொறுப்பேற்றுக்கொண்டார். முந்தைய ஆட்சியர் டாக்டர் ஜே.யு.சந்திரகலா, ஐ.ஏ.எஸ் அவர்களுக்குப் பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் 18 மே 1975 அன்று பிறந்தார். சென்னையில் உள்ள எத்திராஜ் மகளிர் கல்லூரியில் (Ethiraj College for Women) கார்ப்பரேட் செக்ரட்டரிஷிப் (Corporate Secretaryship) இளங்கலைப் பட்டம் பெற்றார்.

புது தில்லியில் உள்ள புகழ்பெற்ற ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் (JNU) சமூகவியல் (Sociology) துறையில் முதுகலைப் பட்டமும் (M.A.), அதைத் தொடர்ந்து ஆய்வியல் நிறைஞர் (M.Phil.) பட்டமும் பெற்றார்.

கல்வியை முடித்த பின், 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய குரூப்1 தேர்வில் (Combined Civil Services Examination - I) தேர்ச்சி பெற்றார்.

தமிழ்நாட்டின் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் (Tamil Nadu Fire and Rescue Services) இணைந்த முதல் பெண் உயர் அதிகாரி என்ற பெருமையைப் பெற்றார்.

தீயணைப்புத்துறையில் (Non-SCS கோட்டா மூலம்) இவரது சிறந்த பங்களிப்பைக் கருத்தில் கொண்டு, 2017 ஆம் ஆண்டு பேட்ச் ஐ.ஏ.எஸ் (IAS) அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றார். தமிழ்நாடு தீயணைப்புத் துறையிலிருந்து இந்திய ஆட்சிப் பணிக்கு (IAS) தகுதி உயர்த்தப்பட்ட முதல் அதிகாரி இவரே ஆவார்.

அரசுப் பணியில் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயலாற்றும் நடுத்தரப் பின்புலத்தைக் கொண்ட

குடும்பச் சூழலில் இருந்து வந்து, தனது விடாமுயற்சியால் இந்த உயரத்தை எட்டியுள்ளார்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மாவட்ட அதிகாரி (சென்னை மத்திய பகுதி). தீயணைப்புத்துறையின் இணை இயக்குநர் (வடக்கு மண்டலம்).விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் சார் ஆட்சியர் (Sub-Collector). தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் (TNUHDB) இணை நிர்வாக இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர். தற்போது ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர்.



என்.பிரியா ரவிச்சந்திரன் அவர்கள் மிகச்சிறந்த பேரிடர் மேலாண்மைத் திறனும், அஞ்சாத துணிச்சலும் கொண்ட ஒரு முன்மாதிரி அதிகாரி ஆவார்.

கடந்த 2012 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையின் போது, சென்னையின் பாரம்பரியமிக்க 'கலாஸ் மஹால்' (Kalas Mahal) கட்டிடத்தில் நள்ளிரவில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. அப்போது மாவட்ட தீயணைப்பு அதிகாரியாக இருந்த பிரியா, தீயின் இருப்பிடத்தைக் கண்டறிந்து அணைக்கத் தனது குழுவினருடன் நேரில் களமிறங்கினார். அந்தப் பேரிடரின் போது கட்டிடம் இடிந்து விழுந்ததில், இவர் 45% கடுமையான தீக்காயங்களுக்கு உள்ளானார்.

பல மாத தீவிர சிகிச்சைக்குப் பின், அந்தப் பெரிய விபத்திலிருந்து மீண்டு வந்து மீண்டும் மக்கள் பணியைத் தொடர்ந்தார். இவரது இந்த அசாத்திய ஆளுமையும், கடமை உணர்வும் ஒட்டுமொத்த தமிழக காவல்துறையினராலும் பாராட்டப்பட்டது.

இவரது வீர தீரச் செயல்களுக்காகப் பல்வேறு மிக முக்கிய விருதுகளைப் பெற்றுள்ளார். குடியரசுத் தலைவரின் துணிச்சலுக்கான விருது (President's Award for Gallantry)

சிறந்த சேவைக்கான குடியரசுத் தலைவரின் காவல் பதக்கம் (President's Police Medal for Meritorious Service) துணிச்சலுக்கான தமிழக அரசின் அண்ணா பதக்கம் (Anna Medal for Bravery)

தீயணைப்புத்துறையில் தீரத்துடன் செயல்பட்டு, தற்போது நிர்வாகத்துறையிலும் முத்திரை பதித்து வரும் பிரியா ரவிச்சந்திரன் ஐ.ஏ.எஸ் அவர்களின் வருகை, ராணிப்பேட்டை மாவட்டத்தின் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# போலி ரசீது மூலம் வீட்டை அபகரித்த நபர்: மனுகொடுத்தும் நடவடிக்கை இல்லையே...

## – வேதனையில் பெண் குமுறல்



தேனிஅல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட தேனி ,சமதர்மபுரம் நம்.43, நரேந்திர தெருவில் குடியிருக்கும் பாலு என்பவரின் மனைவி மாரியம்மாள், தேனி நகராட்சி ஆணையாளர் மற்றும் பெரியகுளம் சப்கலெக்டர், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோரிடம் கொடுத்துள்ள மனுவில், "எனது கணவருக்கு சொந்தமான அவருடைய அப்பா பெயரில் (வள்ளிக்கண்ணு) உள்ள வீட்டினை ஒரு நபர் ராஜா என்ற பெயரில் மாற்றி இருக்கிறார்.

இது சம்பந்தமாக மேலே குறிப்பிட்ட அனைத்து அதிகாரிகளிடம் பெயரில் மாற்றிட கோரி மனு கொடுத்து இருக்கிறேன். நடவடிக்கை எடுத்த பாடில்லை. மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடமும் மனு அளித்து இருக்கிறேன். ஆகவே, மாவட்ட நிர்வாகத்தில் உள்ள உயர் அதிகாரிகள் அந்த வீட்டின் ரசீதினை என் கணவரின் அப்பா பெயரில் மாற்றிட நடவடிக்கை எடுத்திட வேண்டுகிறேன். மேலும் ரசீது போட்டுத் தரக்கூறி நிறைய செலவு செய்து இருக்கிறேன்" என்று தெரிவித்தார்.

– செல்வராஜ்

# மக்கள் நலனில் அக்கறையோடு தவெக அரசு!



தமிழ்நாட்டின் முதலமைச்சராக தமிழக வெற்றிக் கழகம் (தவெக) தலைவர் சி. ஜோசப் விஜய் பதவியேற்று 30 நாட்கள் நிறைவடைந்துள்ளது. இந்த குறுகிய கால ஆட்சிக்குள், தவெக அரசு பல்வேறு மக்கள் நலத் திட்டங்களையும், புதிய அரசியல் மாற்றங்களையும் முன்னெடுத்துள்ளது.

முதலமைச்சர் விஜய் தலைமையிலான புதிய அரசின் முக்கிய 30 நாள் சாதனைகள் மற்றும் அறிவிப்புகள் .

பதவியேற்றதைத் தொடர்ந்து நடைபெற்ற முதல் அமைச்சரவைக் கூட்டத்தில், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய 436 புதிய திட்டங்களுக்கு முதலமைச்சர் விஜய் ஒப்புதல் அளித்துள்ளார். இந்த திட்டங்கள் இளைஞர் நலன், பெண்கள் மேம்பாடு, விவசாயிகள் மற்றும் மீனவர்கள் நலனை மையமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளன.

பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், மாநிலம் முழுவதும் குற்றங்களைத் தடுக்கவும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் 'சிங்கப்பெண் சிறப்புப் படை' (Singappen Task Force) என்ற புதிய பாதுகாப்புப் பிரிவைத் தவெக அரசு அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியுள்ளது.

மக்களின் அத்தியாவசியத் தேவையை நிறைவு செய்யும் நோக்கில், வீடுகளுக்கு 200 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்கும் முக்கிய நலத்திட்டத்தை தவெக அரசு தனது முதல் மாத ஆட்சிக் காலத்திற்குள் அறிவித்துள்ளது.

இளைஞர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் தொலைநோக்குப் பார்வையுடன், மாநிலம் முழுவதும் போதைப்பொருள் புழக்கத்தையும், விற்பனையையும் முற்றிலுமாக ஒழிக்க தீவிரக் கண்காணிப்பு மற்றும் அதிரடி போதைப்பொருள் தடுப்புச் சட்ட அமலாக்க நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசியல் வரலாற்றில் பல தசாப்தங்களுக்குப் பிறகு, தவெக அரசு தனது கூட்டணிக் கட்சிகளான விசிக (VCK) மற்றும் ஐயுஎம்எல் (IUML) போன்ற கட்சிகளுக்கு அமைச்சரவையில் இடமளித்து, அதிகாரப் பகிர்வுடன் கூடிய புதிய கூட்டு அரசியல் பண்பாட்டை உருவாக்கியுள்ளது.

சாதனைகள் ஒருபுறமிருந்தாலும், புதிய தவெக அரசு பதவியேற்ற இந்த முதல் 30 நாட்களில் கோடைகால மின்வெட்டுப் பிரச்சினைகள், சட்டம் ஒழுங்கு சவால்கள் மற்றும் எதிர்க்கட்சிகளின் கடுமையான அரசியல் விமர்சனங்களையும் எதிர்கொண்டு வருகிறது.

# விஜய்யை சந்திக்கும் மதிமுக துரை வைகோ!

## மு.க.ஸ்டாலின் ரியாக்ஷன்





தமிழக அரசியல் களத்தில் தற்போதைய சூழ்நிலை மிக முக்கியமான ஒரு கட்டத்தை எட்டியுள்ளது. கூட்டணியில் நீடித்துவரும் மறைமுகமான மோதல்கள் தற்போது வெளிப்படையான விவாதங்களாக மாறத் தொடங்கியுள்ளன.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட மிகப்பெரிய அரசியல் மாற்றங்களைத் தொடர்ந்து, மதிமுகவின் அரசியல் நிலைப்பாடு குறித்து பல்வேறு விவாதங்கள் எழத் தொடங்கியுள்ளன.

திருச்சியில் முதலமைச்சர் விஜய்யை நேரில் சந்தித்து வரவேற்ற மதிமுக நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ, செய்தியாளர்களிடம் பேசும்போது தங்களின் அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

தாங்கள் ஒரு தனி இயக்கம் என்றும், கடந்த தேர்தலில் துரதிர்ஷ்டவசமாக திமுக கூட்டணியில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாலேயே, தவெகவிற்கு தங்களால் ஆதரவு அளிக்க முடியாமல் போனதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், ஜூன் 27ம் தேதி நடைபெறவிருக்கும் கட்சியின் பொதுக்குழு கூட்டத்தில் நிர்வாகிகளின் மனநிலை மற்றும் தொண்டர்களின் விருப்பங்களைக் கேட்டறிந்த பிறகே, திமுக கூட்டணியில் தொடர்வதா இல்லையா என்பது குறித்த இறுதி முடிவு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

அதேபோல் திமுக கூட்டணியில் மதிமுகவிற்கு மட்டும் குறைவான இடங்களை ஒதுக்கியதும், கடைசி நேரத்தில் உதயசூரியன் சின்னத்தில்தான் போட்டியிட வேண்டும் என்று நிர்பந்தித்ததும் தொண்டர்களிடையே மிகப்பெரிய ஆதங்கத்தை ஏற்படுத்தியதாக வைகோ தெரிவித்தார்.

எனவே மதிமுக பொதுக்குழு கூட்டத்திற்குப் பிறகு மிகப்பெரிய அதிரடி மாற்றம் மற்றும் புதிய கூட்டணி திருப்பம் அரங்கேறலாம் என்று அரசியல் விமர்சகர்கள் பெரிதும் எதிர்பார்க்கிறார்கள்.

தேர்தலுக்கு முன்பிருந்தே அக்கட்சிக்குள் புகைந்து கொண்டிருந்த உட்கட்சிப் பூசல்களும், கடுமையான எதிர்ப்புகளுமே முக்கியக் காரணமாகப் பார்க்கப்படுகின்றன.

குறிப்பாக மதிமுக முக்கிய நிர்வாகிகளான பொடா அழகு சுந்தரம், சண்முகசுந்தரம், புலவர் செவந்தியப்பன், டி.ஆர்.ஆர்.செங்குட்டுவன் மற்றும் முன்னாள் அவைத்தலைவர் எஸ்.துரைசாமி உட்பட 12 முக்கிய நிர்வாகிகள் ம.தி.மு.க.,விலிருந்து முற்றிலும் விலகி, தற்போது அதிருப்தியாளர்களாக வெளியே முகாமிட்டுள்ளனர்.

அதுமட்டுமின்றி, கட்சியின் துணை பொதுச்செயலராக இருந்த மல்லை சத்யாவும் ம.தி.மு.க.,விலிருந்து விலகி, தற்போது 'திராவிட வெற்றிக்கழகம்' என்ற தனிக்கட்சியைத் தொடங்கி நடத்தி வருகிறார்..

இந்நிலையில் திமுக கூட்டணியிலிருந்து மதிமுக அதிகாரப்பூர்வமாக வெளியேறும் முடிவை எடுக்கும் பட்சத்தில், திமுகவும் தங்களது அடுத்தகட்ட அரசியல் வியூகத்தை வகுக்கத் தயாராகிவிட்டதாக தெரிகிறது..

அதன்படி, மதிமுக கூட்டணியை விட்டு வெளியேறினால், மதிமுக அதிருப்தியாளர்கள் 12 பேரையும் உடனடியாக திமுகவில் சேர்த்துக் கொள்ள திமுக தலைவர். ஸ்டாலின் தரப்பில் பச்சைக்கொடி காட்டப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.. பொறுத்திருந்து பார்ப்போம்...!

# சென்னை-மும்பை தேசிய நெடுஞ்சாலையின் மூடப்பட்ட வழித்தடம்

## – கடும் சிரமத்தில் வாகன ஓட்டிகள்

ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டை பகுதியில் அமைந்துள்ள சென்னைமும்பை தேசிய நெடுஞ் சாலையில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு சாலை விரிவாக்கம் செய்யப்பட்டு 6 வழி சாலையாக நெடுஞ்சாலை துறையின் மூலம் மாற்றப்பட்டது.

அதில் சென்னையில் இருந்து மும்பை செல்லும் தேசிய நெடுஞ்சாலையின் ஒரு வழித்தடம் கடந்த 3 மாதங்களுக்கு மேலாக மூடப்பட்டிருப்பதால் வாகன ஓட்டிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

சென்னை, வேலூர், பெங்களூரு மற்றும் மும்பையை இணைக்கும் மிக முக்கியமான தொழில்துறை வழித்தடம் இதுவாகும். ஸ்ரீபெரும்புதூர், இருங்காட்டுக்கோட்டை, ஒரகடம் போன்ற பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளின் பெருக்கத்தால், இந்தச் சாலையில் வாகனப் போக்குவரத்து பல மடங்கு அதிகரித்தது. இதனால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், விபத்துகளைத் தவிர்க்கவும் இந்த ஆறு வழிச்சாலை விரிவாக்கம் அவசியம் என்று மத்திய அரசு முடிவு செய்தது.

இந்த சாலையை ஆறு வழிச்சாலையாக மாற்றுவதோடு மட்டுமில்லாமல், உள்ளூர் வாகனங்கள் நெடுஞ்சாலையில் இடையூறு இல்லாமல் செல்ல இருபுறமும் தார்ச்சாலையிலான நவீன 'சர்வீஸ் சாலைகள்' மற்றும் முறையான தெருவிளக்கு வசதிகள் செய்யப்பட்டன. வாலாஜாபேட்டை, சென்னைசமுத்திரம், காவேரிப்பாக்கம் போன்ற முக்கிய சந்திப்புகளில் வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் சாலையைக் கடக்க வாகனக் கீழ்வழிச் சுரங்கப்பாதைகள் மற்றும் மேம்பாலங்கள் திட்டமிடப்பட்டு கட்டப்பட்டன. அத்துடன் சென்னைமும்பை தேசிய நெடுஞ்சாலை ஆறு வழித்தடங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.அத்துடன் கடந்த சில மாதங்களுக்கு முன்பு பொதுமக்கள்




பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது.

ஆனால் தற்போது அதில் ஒரு வழிப்பாதை மீண்டும் மூடப்பட்டுள்ளது. இதனால் அந்த வழியாக செல்லும் கனரக வாகனங்கள் முதல் இருசக்கர வாகன வரை அனைத்து வாகனங்களும் சர்வீஸ் சாலை மாற்றுப்பாதையில் இயக்கப்படுகிறது. இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதுடன், வாகன ஓட்டிகள் நீண்ட நேரம் காத்திருந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது..

மேலும் இதுகுறித்து தேசிய நெடுஞ் சாலைத்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, சில மாதங்களாக கட்டுமானப் பணிகள் இன்னும் நிறைவடையாததால் தற்காலிகமாக அந்த வழித்தடம் மூடப்பட்டுள்ளதாக தெரிவித்தனர் . மேலும் பணிகள் முழுமையாக முடிவடையாத நிலையிலேயே சாலையை அவசரமாக திறந்து வைத்த பின்னர் மீண்டும் மூடுவது பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

எனவே நிலுவையில் உள்ள பணிகளை விரைந்து முடித்து முழு சாலையையும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வாகன ஓட்டிகள் மற்றும் அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர்.






# சிறுபான்மையின மக்களைக் காப்பாற்றும் லட்சணம் இதுதானா?

## - ஆவடி நாசர் நறுக்...

ஜோசப் விஜய் தலைமையிலான தவெக அமைச்சரவையில் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் ஷாஜகான் இடம்பெற்றுள்ளார். ஐ.யு.எம்.எல் கட்சி திமுக கூட்டணியில் இணைந்து போட்டியிட்டு 2 இடங்களில் வென்ற நிலையில், அக்கட்சி சார்பில் ஷாஜகான் தவெக அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளார். இந்நிலையில், குர்பானிக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்ட விவகாரத்தில் ஐ.யு.எம். எல் கட்சியை திமுக கடுமையாகச் சாடியுள்ளது.

முன்னாள் அமைச்சர் நாசர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சிறுபான்மை இசுலாமிய சமுதாய மக்களின் காவல் அரணாக விளங்கிய தி.மு.க அரசு இருந்தவரையில் எவ்வித தடையும் தடங்கலுமின்றி நடைபெற்று வந்த பக்ரீத் திருநாள் குர்பானி வழங்கும் நிகழ்வுகளுக்கு, முதன்முறையாக த.வெ.க ஆட்சியில் இடையூறு ஏற்பட்டு, மக்களின் மனத்தில் அழியா வடுவாக மாறியுள்ளது. இந்த வடுவை சிறுபான்மை யின மக்களுக்கு ஏற்படுத்தி விட்டுத்தான், திருச்சிக்குச் சென்ற முதலமைச்சர் ஜோசப் விஜய், "மதச்சார்பற்ற கொள்கையில் உறுதியாக இருப்பேன்" என்று வெற்றுக் கோஷம் எழுப்பினார்.

போலீசை வைத்து அரட்டி உருட்டி மிரட்டி குர்பானி திருநாளைச் சோக நாளாக்கிய முதலமைச்சர், ஆட்சி பொறுப்பேற்ற சில நாட்களிலேயே சிறுபான்மையினரின் சுதந்திரத்தில் கைவைத்து விளையாடி விட்டார் என ஒவ்வொரு சிறுபான்மையினரின் மனதிலும் வேதனைத் தீயாகக் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது.

"எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல்" இப்போது அடுத்தகட்டமாக, நீதிமன்றத்தில் அரசின் சார்பில் "பொது இடங்களில் குர்பானி கொடுப்பதற்குத் தடை விதித்து உயர்நீதிமன்றம் அளித்த உத்தரவைக் கவனமாகவும் கண்ணும் கருத்துமாகவும் நிறைவேற்றியுள்ளோம்" எனத் தீர்ப்பை நிறைவேற்றியதற்கான அறிக்கையையும் தாக்கல் செய்திருக்கிறது. சிறுபான்மையினர் நலனில் பதவியேற்ற சில நாட்களில் த.வெ.க அரசின் உண்மை முகம் வெளிச்சத்திற்கு வந்து விட்டது. "பூனைக்குட்டி வெளியே வந்து விட்டது" என்பது போல் முதலமைச்சரின் இரட்டை வேடமும் வெளியே வந்து விட்டது.

த.வெ.க அரசில் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சராக இருக்கும் ஷாஜஹான் அந்தத் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யப் போகிறோம் என்கிறார். போலீசை வைத்து குர்பானி நடத்த விடாமல் செய்த போது இந்த அமைச்சர் எங்கே உறங்கிக் கொண்டிருந்தார்?

பா.ஜ.க ஆட்சிக்கு வருவதை தடுக்கப் போகிறோம் என்று ஓடோடிச் சென்று விஜய்க்கு ஆதரவளித்து அமைச்சர் பதவிக்கு வந்த ஐ.யூ.எம்.எல் சிறுபான்மை யின மக்களைக் காப்பாற்றும் லட்சணம் இதுதானா? எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

# விடிய விடிய போராடி டாஸ்மாக் கடையை மூடிய மக்கள்



கன்னியாகுமரி மாவட்டம் கருங்கல் அருகே பொதுமக்கள் டாஸ்மாக்கை தொடர் போராட்டம் நடத்தி மூட வைத்துள்ளார்கள்.

இதையடுத்து இனிப்பு வழங்கி பொது மக்கள் கொண்டாடினார்கள். முன்னதாக டாஸ்மாக் கடையை மூட வலியுறுத்தி விடிய விடிய போராடி மக்கள் மூட வைத்துள்ளார்கள். பாயாசம் தயார் செய்து அனைவருக்கும் கொடுத்து மகிழ்ச்சியை பரிமாறிக் கொண்டார்கள்.

கன்னியாகுமரி மாவட்டம் கருங்கல் அருகே தெருவுக்கடை பகுதியில் டாஸ்மாக் மதுக்கடை ஒன்று செயல்பட்டு வந்தது. அந்த கடையை மூடக்கோரி அப்பகுதி மக்கள் கடந்த 21ந் தேதி கடைக்கு எதிரே போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அப்போது போலீசார் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். தொடர்ந்து டாஸ்மாக் கடை நிர்வாகத்தினர் மதுக்கடையை மூட 4 நாட்கள் கால அவகாசம் கேட்டனர். இதற்கு ஒத்துக்கொண்ட மக்கள் போராட்டத்தை கைவிட்டு அங்கிருந்து கலைந்து சென்றனர்.

ஆனால் கால அவகாசம் முடிந்தும் கடை திறந்து செயல்பட்டதால் டாஸ்மாக் கடையை நிரந்தரமாக மூடக்கோரி நேற்று முன்தினம் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள். அவர்களிடம் குளச்சல் டிஎஸ்பி(பொறுப்பு) காந்தி பேச்சுவார்த்தை நடத்தினார். இதில் உடன் பாடு ஏற்படாததால் போராட்டம் விடிய விடிய நடைபெற்றது. அங்கு பலத்த போலீஸ் பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இதுபற்றிய தகவல் அறிந்து சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேஷ்குமார் நேற்று காலை 9 மணியளவில் சம்பவ இடத்துக்கு வந்து போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். அவருடன் டாஸ்மாக் கோட்ட மேலாளர் சரவணன், கிள்ளியூர் தாசில்தார் அஜிதா, கருங்கல் பேரூராட்சி தலைவர் சிவராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.

அப்போது இந்த டாஸ்மாக் கடை நேற்று முதல் நிரந்தரமாக மூடப்படும் என அமைச்சர் ராஜேஷ்குமார் தெரிவித்தார். அத்துடன் கடை மூடப்பட்டது. இதையடுத்து பொதுமக்கள் போராட்டத்தை கைவிட்டு அனைவருக்கும் இனிப்பு வழங்கி வெற்றியை கொண்டாடினார்கள்.

தொடர்ந்து அமைச்சர் ராஜேஷ்குமார் செய்தியாளர்களிடம் பேசுகையில், "தெருவுக்கடைப் பகுதியில் நீண்ட காலமாக ஒரு டாஸ்மாக் மதுக்கடை செயல்பட்டு வந்தது. இந்த பகுதியை பொறுத்த வரையில் ஒரு போக்குவரத்து நெரிசலான பகுதி. இங்கே தேவாலயங்கள், கோவில்கள், பள்ளிக்கூடங்கள், வணிக வளாகங்கள் உள்ளன. இதனால், நீண்ட காலமாக இந்த மதுக்கடையை மாற்ற வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர். இதுதொடர்பாக பல போராட்டங்கள் நடத்தப்பட்டன. இதையெல்லாம் கவனத்தில் கொண்டு கன்னியாகுமரி மாவட்ட கலெக்டரின் கவனத்திற்கு கொண்டு சென்று, துறை அதிகாரிகளிடம் ஆலோசித்து தெருவுக்கடைப் பகுதியில் செயல்பட்ட இந்த கடை மூடப்பட்டுள்ளது" இவ்வாறு அமைச்சர் கூறினார்.

# குடியிருக்கும் வீடு பறிபோகும் அபாயம்!

## தவிப்பில் மக்கள்.. கண்டுகொள்வாரா முதல்வர்




கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை வட்டத்தில் அமைந்துள்ள கெலமங்கலம், ஓசாபுரம் மற்றும் ஆனேகொள்ளு ஆகிய கிராமப் பகுதிகளில் திடீரென ஒரு பெரும் பரபரப்பும், மக்கள் மத்தியில் வாழ்வாதாரப் பதற்றமும் தொற்றிக்கொண்டுள்ளது.

இந்த கிராமங்களில் உள்ள இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான அருள்மிகு காசிவிஸ்வநாதர், அருள்மிகு பட்டாளம்மன் மற்றும் அருள்மிகு விருப்பாட்சீஸ்வரர் திருக்கோயில்களுக்கு சொந்தமான நிலங்களில், கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இந்த நிலங்களில் உருவாகியுள்ள குடியிருப்புகள் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவின் அடிப்படையில், தற்பொழுது அதிகாரிகள் தரப்பில் நில அளவீடு மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றுவது தொடர்பான தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் சொந்த இருப்பிடத்தை விட்டு எந்த நேரமும் வெளியேற்றப்படலாம் என்ற இக்கட்டான சூழ்நிலை உருவாகியுள்ளதால், அங்குள்ள 1007க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்களின் எதிர்காலம் என்னவாகுமோ என்று தெரியாமல் திகைத்து நிற்கின்றனர்.

இந்த சூழ்நிலையில்தான், அகில இந்திய ஜனநாயக மக்கள் நலப் பேரமைப்பின் சார்பில் டாக்டர் ஆ.ஹென்றி, தமிழ்நாடு முதலமைச்சருக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில், கோயில் சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இல்லை என்றும், அதே நேரத்தில் அங்கு வாழும் மனிதர்களின் வாழ்வுரிமையும் மனிதநேயத்தோடு பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

தமிழக அரசு ஏற்கனவே கூவம் மற்றும் அடையாறு ஆற்றங்கரை ஆக்கிரமிப்புகளில் வசித்த மக்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் (முன்னாள் குடிசைப்பகுதி மாற்று வாரியம்) மூலம் பெரும்பாக்கம், கண்ணகி நகர், செம்மஞ்சேரி, நாவலூர் போன்ற இடங்களில் மாற்று குடியிருப்புகள் வழங்கி மறுவாழ்வு அளித்த அதே மனிதநேய அணுகுமுறையை இங்கும் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த 1007 குடும்பங்களில் தினக்கூலி தொழிலாளர்கள், சிறு வியாபாரிகள், முதியோர்கள், விதவைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் அதிக அளவில் உள்ளதால், அரசு உடனடியாக அங்கு சில முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று டாக்டர் ஆ.ஹென்றி தனது கடிதத்தில் ஏழு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்.

அதன்படி, வசிப்பவர்களின் வருமானம் மற்றும் தொழில் குறித்த சமூக பொருளாதார கணக்கெடுப்பை நடத்த வேண்டும்; உண்மையான குடியிருப்பாளர்களையும் வணிக ஆக்கிரமிப்புகளையும் தனித்தனியாக வகைப்படுத்த வேண்டும்; தகுதியான குடும்பங்களுக்கு மாற்று இடத்தில் நிரந்தர வீடுகள் கட்டித் தர வேண்டும் என்று டாக்டர் ஆ.ஹென்றி தனது கடிதத்தில் மிக உருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்...!!!

# ஒரு மேயர் பதவியை ஜெயிச்சா.. ஒரு பக்க மீசையை எடுத்துக்குறேன்!

### – ஆதவ் அர்ஜுனாவுக்கு ஆர்எஸ் பாரதி சவால்




தமிழ்நாட்டின் மொத்தமுள்ள 25 மாநகராட்சி மேயர் பதவிகளில் ஒரே ஒரு மேயர் பதவியையாவது தி.மு.க வெற்றி பெற்று காட்டட்டும் தைரியம், தில் இருந்தால் எங்களோடு மோதிப் பாருங்கள் என திமுக அமைப்புச் செயலாளர்கள் ஆர்எஸ் பாரதி கூறியுள்ளார்.

புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்," திமுக காங்கிரஸ் கூட்டணி தொடர்கிறது என்று ப.சிதம்பரம் கூறி யிருந்தாலும், நாங்கள் காங்கிரஸ் கூட்டணியை டைவர்ஸ் பண்ணிட்டோம். சில கட்சிகள் எங்களை விட்டு சென்றாலும் எங்களோடு ஆலோசனை செய்துவிட்டு சென்றனர்.

இனிமேல் எந்த காலத்திலும் முதுகில் குத்துவிட்டு ஓடியவர்களை சேர்க்க மாட்டோம்; அவர்களோடு ஒட்டும் கிடையாது உறவும் கிடையாது;

இனி கட்சி தொண்டன் அவர்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்; காங்கிரஸ் எங்கு உள்ளதோ அந்த கூட்டணியுடன் நாங்கள் இருக்க மாட்டோம். இனி எந்த காலத்திலும் காங்கிரசோடு கூட்டணி கிடையாது. பாஜக ஓடும் எந்த காலத்திலும் திமுக கூட்டணி சேராது. லாட்டரியில் ஜாக்பாட் அடித்தது போன்று இந்த தேர்தலில் தமிழக வெற்றி கழகத்திற்கு ஜாக்பாட் அடித்துள்ளது இந்த ஆட்சி எத்தனை மாத காலம் நீடிக்கும் என்பது சந்தேகம் தான்.

பல்வேறு கட்சிகளுக்கு போய்ச் சென்ற ஆதவ் அர்ஜுனா திமுக குறித்து பேசுவதற்கு எந்த அருகதையும் கிடையாது. திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் அல்லது உதயநிதிக்கு சவால் விடும் அரசியல் தகுதி ஆதவ் அர்ஜுனுக்கு சிறிதளவும் இல்லை. அவர், "ஒரு தேர்தலில் ஒரு மேயரைக் கூட வெல்ல முடியாது" என்று கூறுகிறார்.

ஆனால் அவர் வரலாற்றை அறியாமல் பேசுகிறார். எம்.ஜி.ஆரை விட பெரிய தலைவர் யாரும் இல்லை; விஜயும் இல்லை, வேறு யாரும் இல்லை. 1984 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், நாங்கள் அங்கீகரிக்கப்பட்ட எதிர்க்கட்சியாகக் கூட வரவில்லை. அந்தத் தேர்தலில் எம்.ஜி.ஆர் அமெரிக்காவில் சிகிச்சை பெற்று கொண்டிருந்தபோதும், தேர்தலில் நேரடியாக பங்கேற்காமல் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியில் அமர்ந்தார். அதன்பிறகு 1986ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில், 102 நகராட்சிகளில் சுமார் 90 நகராட்சிகளை எங்கள் கூட்டணி கைப்பற்றியது.

எனவே, நான் அவரிடம் ஒரு கேள்வியை முன்வைக்கிறேன். ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்களுக்குப் பிறகு, ஜனவரி மாதத்தில் உள்ளாட்சித் தேர்தலை நடத்துங்கள். அதில் ஒரு மேயர் பதவியையாவது நீங்கள் வெல்ல முடிந்தால், நான் என் ஒரு பக்க மீசையை எடுத்துக் கொள்கிறேன். இந்தச் சவாலை ஏற்க அவர்கள் தயாரா? ஏனெனில், கடந்த ஒரு மாதமாக தமிழக மக்களிடம் பேசும்போது அவர்கள் கூறும் கருத்துகள் வேறுபட்டதாக உள்ளன. பலர், "எதிர்பாராத சூழ்நிலைகளாலும், குடும்பத்தினரின் வற்புறுத்தலாலும், பல்வேறு காரணங்களாலும் வாக்களித்தோம்" என்று தெரிவிக்கின்றனர் என்றார்.

# போக்குவரத்து காவலர்கள் அடாவடி...



## சட்டம் சொல்வது என்ன?

வாகன சோதனையின் போது காவல் துறை அதிகாரிகள் பொதுமக்களை மரியாதையுடனும், சட்டப்படியும் நடத்த வேண்டும். மேலும், வாகனங்களை நேரடியாகப் பறிமுதல் செய்யவோ அல்லது ஓட்டுநர் உரிமத்தை (Driving License) நிரந்தரமாக ரத்து செய்யவோ போக்குவரத்துப் போலீசாருக்கு முழுமையான அதிகாரம் இல்லை.

இந்திய மோட்டார் வாகனச் சட்டம், 1988 (Motor Vehicles Act) மற்றும் நீதிமன்ற வழிகாட்டுதல்களின்படி, வாகன சோதனையின் போது தேவையற்ற மிரட்டல், அவமதிப்பு, கெட்ட வார்த்தைகளால் பேசுதல், தாக்குதல் அல்லது அச்சுறுத்துதலில் ஈடுபடக் கூடாது.

சோதனையில் ஈடுபடும் அதிகாரிகள் முறையான சீருடையில் இருக்க வேண்டும். அவர்களின் பெயர் விவரம் அடங்கிய 'நெம்பேஜ்' (Name Badge) தெளிவாகத் தெரிய வேண்டும்.

எவ்வித சந்தேகமும் அல்லது போக்குவரத்து விதிமீறலும் இல்லாமல், காரணமின்றி பொதுமக்களை வழிமறித்து வாகனங்களை நிறுத்தக் கூடாது.

மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவு 207ன் படி, குறிப்பிட்ட சில தீவிரமான விதிமீறல்களின் போது மட்டுமே வாகனத்தைப் பறிமுதல் செய்ய போலீசாருக்கு அதிகாரம் உண்டு.

வாகனத்திற்கு முறையான பதிவுச் சான்றிதழ் (RC Book) இல்லாமல் இயக்குவது. வணிக ரீதியிலான வாகனங்களை முறையான பர்மிட் (Permit) அல்லது தகுதிச் சான்றிதழ் (Fitness Certificate - FC) இன்றி இயக்குவது. மிகவும் ஆபத்தான முறையில் வாகனத்தைப் பயன்படுத்துவது.

மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுதல் (Drunk and Drive): இந்தச் சூழலில், ஓட்டுநரால் தொடர்ந்து வாகனம் ஓட்ட முடியாது என்பதால், வாகனத்தை போலீசார் நிறுத்தலாம். ஆனால், நீதிமன்றத் தீர்ப்புகளின்படி வாகனத்தை நேரடியாகப் பறிமுதல் செய்ய முடியாது. வாகனத்தை எடுத்துச் செல்ல ஓட்டுநரின் உறவினருக்கோ அல்லது நண்பருக்கோ போலீசார் தகவல் தெரிவிக்க வேண்டும்.

ஒரு காவல் துறை அதிகாரி நேரடியாக ஒருவருடைய ஓட்டுநர் உரிமத்தை நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ ரத்து (Revoke) செய்ய முடியாது.

தீவிர விதிமீறல்களான (அதிவேகம், குடிபோதையில் ஓட்டுதல், சிக்னலை மீறுதல், மொபைல் பேசி உபயோகிப்பது) போன்றவற்றில் ஈடுபடும்போது, மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 206(4)ன் கீழ் போலீசார் ஓட்டுநர் உரிமத்தைப் தற்காலிகமாகப் பறிமுதல் (Seize) செய்ய மட்டுமே முடியும்.

உரிமத்தைப் பறிமுதல் செய்யும் போது, ஓட்டுநருக்கு அதற்குரிய தற்காலிக அங்கீகார ரசீதை (Acknowledgment Receipt) போலீசார் வழங்க வேண்டும்.

பறிமுதல் செய்யப்பட்ட உரிமத்தை போலீசார் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு (RTO / Licensing Authority) அனுப்ப வேண்டும். மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 19ன் படி, சம்பந்தப்பட்ட நபருக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் (Show-Cause Notice) அனுப்பிய பிறகே, ஆர்.டி.ஓ (RTO) உரிமத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்தம் (Suspend) அல்லது ரத்து செய்ய முடியும்.

காவல்துறையினர் சட்டத்திற்குப் புறம்பாக உங்களை நடத்தினால் அதற்கு எதிராக உயர் அதிகாரிகளிடமோ அல்லது நீதிமன்றத்திலோ புகார் அளிக்க பொதுமக்களுக்கு முழு உரிமை உண்டு.

# முதல் முதலாக வந்த அரசு பேருந்து!

## ஆரத்தி எடுத்த கிராம மக்கள்




தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் இருந்து சுமார் 16 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது கொட்டகுடி மலை கிராமம் சுமார் 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

இங்கிருந்து 25க்கும் மேற்பட்ட குழந்தைகள் போடிநாயக்கனூரில் உள்ள அரசு பள்ளிகள் அரசு நிதி உதவி பள்ளிகளில் பயின்று வருகின்றனர். கொட்டகுடியில் இருந்து பேருந்து போக்குவரத்து வசதி இல்லாத நிலையில் இங்கிருந்து பள்ளி செல்லும் குழந்தைகள் தினமும் 2 முதல் 3 கிலோமீட்டர் கால்நடையாக நடந்து சென்று கொட்டகுடி பிரிவு அருகே குரங்கணி செல்லும் பேருந்தில் ஏறி பள்ளிகளுக்கு சென்று வந்தனர்.

தங்கள் கொட்டகுடி மலை கிராமத்திற்கு பேருந்து வசதி அல்லது மினி பேருந்து வசதி கோரிக்கை வைத்து பலமுறை போராட்டங்கள் வைத்தும் தேர்தல் புறக்கணிப்பு செய்தும் இதுவரை யாரும் கண்டு கொள்ளவில்லை என்று இப்பகுதி மக்கள் வேதனை தெரிவித்து வந்தனர்.

இந்நிலையில் தமிழக அரசு போக்குவரத்துக் கழகம் சார்பாக கொட்டக்குடிக்கு பேருந்து சோதனை ஓட்டம் நடைபெற்றது. பின்னர் கொட்டகுடி குரங்கணி பகுதிகளில் தமிழக அரசு போக்குவரத்து துறை சார்பாக பேருந்து போக்குவரத்து தொடங்கியது.

இதுவரை பேருந்து தடமே கண்டறியப்படாத கொட்டகுடி மலை கிராமத்தில் முதன் முதலாக பேருந்து நுழைந்தது கண்டு மபை கிராம மக்கள் உணர்ச்சி பொங்க மிகுந்த மகிழ்ச்சியுடன் பேருந்து வரவேற்றனர்.

தங்கள் வீட்டின் அருகிலேயே தங்கள் குழந்தைகள் பேருந்து மூலம் இறக்கி விடப்படுவதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்த கிராம மக்கள் பேருந்திற்கு பூ மாலை அணிவித்து ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி ஆரத்தி எடுத்து தேங்காய் உடைத்து வரவேற்பு அளித்தனர். அதைத் தொடர்ந்து ஒருவருக்கொருவர் இனிப்பு வழங்கி தங்கள் ஊருக்கு முதல் முதலாக பேருந்து கொண்டாடி மகிழ்ந்தனர்.

காலை 7 மணிக்கு போடியில் இருந்து புறப்பட்டு செல்லும் இந்தப் பேருந்து குரங்கணி சென்று அங்கிருந்து கொட்டகுடி சென்று பயணிகளை ஏற்றிக்கொண்டு போடிநாயக்கனூர் வந்தடையும் மாலை சுமார் 5.30 மணி அளவில் போடிநாயக்கனூரில் இருந்து புறப்பட்டு செல்லும் இந்த பேருந்து கொட்டகுடியில் பள்ளி மாணவ மாணவியர்கள் மற்றும் பயணிகளை இறக்கிவிட்டு குரங்கணி சென்று அங்கு பயணிகளை இறக்கி அங்கிருந்து போடிநாயக்கனூர் திரும்பும் என்று போடிநாயக்கனூர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பணிமனை மேலாளர் ராஜா தெரிவித்தார்.

# தமிழக அரசியல் கட்சிகளுக்கு புதிய சவால்!

## - அண்ணாமலை அதிரடி

தமிழக பாஜக முன்னாள் தலைவர் கே. அண்ணாமலை, அக்கட்சியின் முதன்மை உறுப்பினர் பதவியிலிருந்து விலகியதைத் தொடர்ந்து, "இது நம்ம இயக்கம்" (We The Leaders) என்ற புதிய அரசியல் இயக்கத்தைத் தொடங்கியுள்ளார். தமிழக அரசியலில் ஒரு புதிய பாதையை உருவாக்குவதையும், சாமானிய மக்களுக்கான அரசியலை முன்னெடுப்பதையும் நோக்கமாகக் கொண்டு இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பா.ஜ.க மாநிலத் தலைவராக இருந்த அண்ணாமலை, தேசியக் கட்சிகளால் மாநிலத்தின் தனித்துவமான குரலை முழுமையாகப் பிரதிபலிக்க முடிவதில்லை என்ற கருத்து வேறுபாட்டின் காரணமாக, ஜூன் 2026 ல் பா.ஜ.கவிலிருந்து முறைப்படி ராஜினாமா செய்தார்.

அரசியல் என்பது குறிப்பிட்ட சில மேல்தட்டு மக்களுக்கு மட்டுமேயான பாதை என்ற நிலையை மாற்றி, சாமானிய மக்களும் பங்கேற்கும் மக்கள் மைய அரசியலாக இதை மாற்றுவது.

வாரிசு அரசியல் மற்றும் தனிநபர் வழிபாட்டு கலாச்சாரத்திற்கு மாற்றாக, சாதாரண குடிமக்களை வருங்கால அரசியல் தலைவர்களாக வளர்த்தெடுப்பது. கல்வி, சுகாதாரம், சுற்றுச்சூழல் மற்றும் இளைஞர் மேம்பாடு ஆகிய துறைகளில் அடிமட்ட அளவில் மாற்றங்களைக் கொண்டு வருவது.

இந்த இயக்கம் ஆரம்பத்தில் ஒரு சமூக அரசியல் இயக்கமாகச் செயல்பட்டு, பின்னர் முழுமையான அரசியல் கட்சியாக மாறும். தமிழகத்தில் வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தல்கள் மற்றும் பொதுத் தேர்தல்களில் இந்த இயக்கம் போட்டியிடும். உள்ளாட்சித் தேர்தலில் சுமார் 22,000 இளம் வேட்பாளர்களைக் களமிறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அண்ணாமலை இந்த இயக்கத்தின் இணையதள லிங்கை வெளியிட்டு, ஆன்லைன் மூலம் உறுப்பினர் சேர்க்கையைத் தொடங்கினார்.



இயக்கம் தொடங்கப்பட்ட முதல் 10 மணி நேரத்திலேயே 10 லட்சத்திற்கும் அதிகமானோர் தங்களை உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொண்டனர். அடுத்த 24 மணி நேரத்திற்குள் இந்த எண்ணிக்கை 14 லட்சத்தைக் கடந்து, குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

அண்ணாமலையின் இந்த அதிரடி முடிவைத் தொடர்ந்து, பா.ஜ.கவின் மாநில மற்றும் மாவட்ட அளவிலான முக்கிய நிர்வாகிகள், தகவல் தொழில்நுட்பப் பிரிவு (IT Wing) உறுப்பினர்கள் பலர் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு, இந்த புதிய இயக்கத்தில் பெருமளவில் இணைந்து வருகின்றனர்.

தமிழக அரசியல் களத்தில் திமுக, அதிமுக மற்றும் நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் போன்ற கட்சிகளுக்கு மத்தியில், அண்ணாமலையின் இந்த புதிய தன்னாட்சி இயக்கம் ஒரு புதிய சவாலாகவும் விவாதப் பொருளாகவும் மாறியுள்ளது.

# கச்சா எண்ணெய் விலை உயர்வு; ரூபாய் மதிப்பு மீண்டும் சரிவு




சமீபத்திய வர்த்தகத்தில் இந்திய ரூபாய் ஒரு டாலருக்கு 95.26 என்ற அளவில் முடிவடைந்தது. இருப்பினும், இந்திய ரிசர்வ் வங்கி மேற்கொண்ட தலையீடுகள் காரணமாக மேலும் பெரிய சரிவு தற்காலிகமாக தடுக்கப்பட்டதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அரசு வங்கிகள் மூலம் டாலர் விற்பனை செய்யப்பட்டதாகவும், அதன் மூலம் ரூபாயின் வீழ்ச்சி கட்டுப்படுத்தப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரூபாயின் மீது தற்போது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவது கச்சா எண்ணெய் விலையாகும். அமெரிக்கா ஈரான் இடையேயான பதற்றம் மற்றும் ஹோர்முஸ் கடல்சந்தி தொடர்பான நிச்சயமற்ற சூழல் காரணமாக பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை பேரலுக்கு 96 முதல் 97 டாலர் வரை உயர்ந்துள்ளது. இந்தியா தனது எண்ணெய் தேவையின் பெரும்பகுதியை இறக்குமதி செய்வதால், எண்ணெய் விலை உயர்வு நேரடியாக ரூபாயின் மதிப்பை பாதிக்கிறது.

இதனுடன் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் தொடர்ச்சியான வெளியேற்றமும் ரூபாய்க்கு சவாலாக மாறியுள்ளது. இந்திய பங்குச்சந்தையில் இருந்து வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் பில்லியன் கணக்கில் முதலீடுகளை திரும்பப் பெற்றுள்ளதால், டாலருக்கான தேவை அதிகரித்து ரூபாயின் மீது அழுத்தம் ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டு மட்டும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சுமார் 27 பில்லியன் டாலர் மதிப்பிலான முதலீடுகளை இந்திய சந்தைகளில் இருந்து வெளியே எடுத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொருளாதார நிபுணர்களின் கருத்துப்படி, தற்போதைய சூழல் நீடித்தால் ரூபாய் மேலும் பலவீனமடையக்கூடும். சில சர்வதேச நிதி நிறுவனங்கள், வரும் மாதங்களில் ஒரு டாலருக்கு எதிராக ரூபாய் 98 என்ற புதிய வரலாற்று குறைந்த நிலையைத் தொடும் வாய்ப்பு இருப்பதாக எச்சரித்துள்ளன.

இந்நிலையில், இந்திய ரிசர்வ் வங்கியின் அடுத்த நாணயக் கொள்கை கூட்டம் சந்தையின் கவனத்தை ஈர்த்துள்ளது. வட்டி விகிதங்களில் மாற்றம் இல்லாவிட்டாலும், ரூபாயை பாதுகாக்கும் நோக்கில் கூடுதல் நடவடிக்கைகள் அறிவிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பணவீக்கம், பொருளாதார வளர்ச்சி மற்றும் நாணய நிலைத்தன்மை ஆகிய மூன்றிற்கும் இடையில் சமநிலையை பேணுவது தற்போது ஸிஙிமிக்கு மிகப்பெரிய சவாலாக உள்ளது.

மத்திய கிழக்கு பதற்றம், எண்ணெய் விலை உயர்வு மற்றும் வெளிநாட்டு முதலீட்டு வெளியேற்றம் ஆகிய மூன்று காரணிகளும் இணைந்து இந்திய ரூபாயின் எதிர்காலத்தை நிச்சயமற்ற நிலையில் தள்ளியுள்ளன. அடுத்த சில வாரங்களில் உலக அரசியல் சூழல் மற்றும் ரிசர்வ் வங்கியின் நடவடிக்கைகள் ரூபாயின் போக்கை தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாக இருக்கும் என்று பொருளாதார வல்லுநர்கள் கருதுகின்றனர்.

# வீடுகளில் மின்சார மீட்டர்கள் பழுதுக்கு அணில் காரணம்..


## மின்சார வாரியம் பதில்

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு ராஜீவ் காந்தி நகரில் மின்சார வயர்கள் பழுதனால் மின்சார மீட்டர்கள் பல இடங்களில் பொசுங்கி போனது.

பல வீடுகளில் மின்சாரம் தடைபட்டதால் மக்கள் அவதிப்பட்டனர். இது தொடர்பாக தமிழ் ஊடகங்களில் செய்தி வெளியானது. இதற்கு பதில் அளித்த மின்சார வாரியம், செய்யாறு கோட்டம், அப்துல்லாபுரம் பிரிவிற்குட்பட்ட துணை மின் நிலையத்திலிருந்து செல்லும் 11 கே.வி. பல்லாவரம் ஃபீடரில், அணில் காரணமாக ஏற்பட்ட மின்குறுக்கீடு காரணமாக 11 கே.வி. மின் கம்பி அறுந்து தாழ்வழுத்த மின் பாதையின் மீது விழுந்தது என்று விளக்கம் அளித்துள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு ராஜீவ் காந்தி நகரைச் சேர்ந்த பொதுமக்கள் பேட்டி அளிக்கையில், செய்யாறு ராஜீவ் காந்தி நகரில் ஏற்கனவே 11 கே.வி. கேபிள் கட்டாகி இதேபோன்ற ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. இந்த சம்பவம் நடந்து ஏழுமாதம் கூட ஆகவில்லை.. அப்போதும் ஒவ்வொரு வீட்டிற்கும் 40 ஆயிரம், 50 ஆயிரம் என செலவு செய்து மின்சார போர்டு உள்பட எல்லா பொருட்களையும் மாற்றினோம். மின் வாரியத்தில் இருந்து மீட்டரை மட்டும் தான் எங்களுக்கு மாற்றிக்கொடுத்திருக்கிறார்கள்.வேறு எந்த ஒரு சலுகையும் எங்களுக்கு பண்ணல.. இப்போது ஏழு மாதம் கழித்து திரும்பவும் நடந்திருக்கிறது. பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளது. கல்வி கட்டணத்திற்கு பணம் கட்டுவதா, மின்சார சாதனங்களை ரிப்பேர் செய்வதா.... என்று புரியவில்லை.. இது தொடர்கதையாக இருக்கிறது.. இது தொடர்கதையாக இருக்கிறது. இதற்கு நிரந்தரமான தீர்வு வேண்டும்..

எங்களுக்கு அந்த 11 கேவி கேபிள் டச்சாகி தான் பிரச்சனையாகிறது. இங்கு 120 குடும்பங்கள் உள்ளன. இதில் 90 குடும்பங்களுக்கு கடந்த முறை மீட்டர் மட்டும் எரிந்தது. அதேபோல் அப்போது வீடுகளில் எந்தெந்த பொருள் பயன்படுத்தி வந்தோமோ, அந்த பொருள் எல்லாம் எரிந்து போனது.. அன்றைய நிலைக்கு யாரும் எதுவும் சொல்லவில்லை. அமைதியாக அவர்களே மாற்றிக்கொண்டார்கள். மக்களே 30 ஆயிரம்,40 ஆயிரம் செலவு செய்து மாற்றிக்கொண்டார்கள்.. நேற்று காலை 11 கேவி கேபிள் தெரு விளக்கு கம்பத்துடன டச் ஆகி, எல்லாரது வீட்டிலும் மீட்டர் வெடித்துள்ளது. அந்த டைமில் பயன்படுத்தி ஹீட்டர், பிரிட்ஜ், ஏசி என எதைஎல்லாம் பயன்படுத்தினார்களோ, அத்தனையும் பழுதாகி உள்ளது" என்று ஆதங்கத்துடன் தெரிவித்தனர்.




இது தொடர்பாக தமிழ்நாடு மின்சார வாரியம் அளித்துள்ள விளக்கத்தில் கூறுகையில், "05.06.2026 அன்று காலை சுமார் 7.45 மணியளவில், செய்யாறு கோட்டம், அப்துல்லாபுரம் பிரிவிற்குட்பட்ட 33/11 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து செல்லும் 11 கே.வி. பல்லாவரம் ஃபீடரில், அணில் காரணமாக ஏற்பட்ட மின்குறுக்கீடு காரணமாக 11 கே.வி. மின் கம்பி அறுந்து தாழ்வழுத்த மின் பாதையின் மீது விழுந்தது.

இதன் விளைவாக, ராஜீவ் காந்தி நகர் SS-2 மூலம் மின்விநியோகம் பெறும் ராஜீவ் காந்தி நகர் பகுதியில் உள்ள சில நுகர்வோரின் மின் மீட்டர்கள் சேதமடைந்தன.

தகவல் கிடைத்தவுடன் மின்வாரிய பணியாளர்கள் உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்று பழுதைச் சீரமைத்து, தற்போது மின்விநியோகம் முழுமையாக சீரமைக்கப்பட்டு, தடையின்றி வழங்கப்பட்டு வருகிறது." இவ்வாறு கூறப்பட்டுள்ளது.





# ஸ்ரீவைகுண்டம் பாலியல் வன்கொடுமை: சுதந்திரமான விசாரணை தேவை!
## – சிபிஎம் வலியுறுத்தல்.!

சிபிஎம் கட்சியின் மாநில செயலாளர் பெ சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது :

தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் அருகே வேலை வாங்கித் தருவதாக இளம் பெண்ணை அழைத்துச் சென்ற தவெக நிர்வாகிகள் அவருக்கு மயக்க மருந்து கொடுத்து கூட்டு பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டுள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த படுபாதக செயலை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

தமிழக வெற்றிக் கழகத்தைச் சார்ந்த ஸ்ரீவைகுண்டம் பகுதி நிர்வாகிகளான பாலமுருகன் மற்றும் ஜெயபால் ஆகியோர் ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. சரவணன் பெயரைச் சொல்லி வேலை வாங்கித் தருவதாக இளம்பெண்ணை காரில் கடத்திச் சென்று குளிர்பானத்தில் மயக்க மருந்து கொடுத்து மிகக் கொடூரமான முறையில் கூட்டு பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டுள்ளனர். இச்சம்பவம் குறித்து வெளியே சொன்னால் கொலை செய்து விடுவோம் என்றும் மிரட்டியுள்ளனர். இளம்பெண்ணை தொடர்பு கொண்ட சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. சரவணன் என்பவரும் போலீசில் புகார் அளிக்கக் கூடாது எனவும் மிரட்டியுள்ளதாக அப்பெண் ஊடகங்கள் வாயிலாக குற்றம்சாட்டியுள்ளார். இச்சம்பவம் தமிழகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இவ்வழக்கில் இருவரை போலீசார் கைது செய்துள்ளனர்.

இருப்பினும், இந்த குற்றச்செயலில் ஈடுபட்டவர்கள் ஆளும் கட்சி பிரமுகர்கள் என்பதால் எந்தவித அரசியல் தலையீடும் இன்றி சுதந்திரமான விசாரணை நடத்திட வேண்டுமெனவும், பாதிக்கப்பட்ட பெண் முன்வைத்துள்ள அனைத்து குற்றச்சாட்டுக்களும் விசாரணையின் கீழ் கொண்டு வரப்பட்டு குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கைகளை உறுதியாக மேற்கொள்ள வேண்டுமெனவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தமிழக அரசை வலியுறுத்துகிறது. மேலும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு உரிய பாதுகாப்பும், அரசு வேலையும், நிவாரணமும் வழங்கிட வேண்டுமெனவும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொள்கிறது.

அதிகாரம், பதவி, பணம் மற்றும் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி தமிழகத்தில் பெண்கள் குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. அரசு உடனே இதை தடுக்கவேண்டும்.

# அமைச்சர்களுக்கு பறந்த ரகசிய உத்தரவு!

## முதல்வர் விஜய் அடுத்த மூவ்..

முதலமைச்சர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழக அமைச்சரவையில், முதலமைச்சரையும் சேர்த்து மொத்தம் 35 பேர் இடம் பெற்றுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் புதுமுகங்கள் மற்றும் இளைஞர்கள். அவர்களுக்கு முக்கியத் துறைகள் ஒதுக்கப்பட்டுப் புதிய உத்வேகத்துடன் ஆட்சி தொடங்கப்பட்டுள்ளது. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு நடைபெற்ற முதல் அமைச்சரவைக் கூட்டத்திலேயே, ஒவ்வொரு துறையும் தங்களின் நீண்டகாலத் திட்டங்களை வகுத்துச் செயலாற்ற வேண்டும் என முதலமைச்சர் விஜய் அறிவுறுத்தியுள்ளார். அதோடு, பொதுவெளியில் பேசும்போதும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கும்போதும் அமைச்சர்கள் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, சமூக அமைப்புகள், சமூகக் குழுக்கள் மற்றும் சாதி சார்ந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்பதைத் தற்போதைக்குத் தவிர்க்குமாறு அமைச்சர்களுக்கு வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சர்கள் எவ்வித சர்ச்சைகளிலும் சிக்காமல், தங்களின் முழு கவனத்தையும் நிர்வாகப் பணிகளில் மட்டுமே செலுத்த வேண்டும் என்பதே கட்சித் தலைமையின் முக்கிய விருப்பமாக உள்ளது.

அமைச்சர்கள் மட்டுமின்றி, தவெகவின் 77 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தொகுதி மக்கள் பணிகளை விரைவுபடுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. தற்போது பல்வேறு பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி அலுவலகங்கள் அமைக்கப்பட்டு வரும் நிலையில், அந்தப் பணிகளை உடனே முடித்து மக்கள் குறைகளைக் கேட்கும் பணியைத் தொடங்க முதலமைச்சர் விஜய் தரப்பிலிருந்து அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்களின் குறைகளையும் கோரிக்கைகளையும் நேரடியாகவும் எளிதாகவும் சமர்ப்பிக்கும் வகையில் இந்த அலுவலகங்கள் செயல்பட வேண்டும் என்றும், வரப்பெறும் மனுக்களுக்கு விரைவாகத் தீர்வு காணும்






வகையில் தகுந்த கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே, திருச்சி கிழக்கு, மதுராந்தகம், பெருந்துறை, தாராபுரம் மற்றும் அம்பாசமுத்திரம் ஆகிய ஐந்து சட்டமன்றத் தொகுதிகள் காலியாக உள்ளதால், அங்கு விரைவில் இடைத்தேர்தல் வர வாய்ப்புள்ளது. இதனால், இந்தத் தொகுதிகளின் அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து விரிவான அறிக்கைகளைச் சேகரிக்கப் பொறுப்பு அமைச்சர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. சட்டப்பேரவைத் தேர்தல் முடிந்து ஓராண்டுக்குள் ஐந்து தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடப்பது அரிதான ஒன்று என்பதால், ஆளுங்கட்சியான தவெகவிற்கு இது ஒரு முக்கியச் சவாலாகப் பார்க்கப்படுகிறது. எனவே, தேர்தல் ஆணையத்தின் அறிவிப்புக்கு முன்பாகவே மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் தேர்தல் களப்பணிகளை முன்கூட்டியே திட்டமிட கட்சித் தலைமை முடிவு செய்துள்ளது.

# ரீல்ஸ் போட்டு மின்வெட்டை தடுக்கமுடியுமா?

## மின்வாரிய சிஐடியு தொழிற்சங்கத் தலைவர் எஸ்.கண்ணன்



தமிழகம் முழுவதும் அண்மைக் காலமாக அறிவிக்கப்படாத மின் வெட்டுகள் தொடர்கின்றன. சென்னை உள்ளிட்ட பெருநகரங்களில் 10 மணி நேரம், 15 மணி நேரம் வரை நீடிக்கும் மின் வெட்டுகளால் பொதுமக்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். இதனால் பொது மக்கள் ஆங்காங்கே சாலை மறியலில் ஈடுபடுவதும், மின்வாரிய அலுவலகங்களை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்துவதும் தொடர்கதையாகி வருகிறது. புதிய மின்துறை அமைச்சர் மற்றும் மின்வாரிய உயரதிகாரிகள் உடனடியாகக் களஆய்வு மேற்கொண்டு, தடையில்லா மின்சாரம் வழங்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

எனினும், கடந்த 20 ஆண்டுகால நிர்வா கச் சீர்கேட்டால் மின்வாரியம் 2.5 லட்சம் கோடி ரூபாய் கடனில் உள்ளதாகவும், ஊழியர் பற்றாக்குறை மற்றும் சில தனிநபர்களின் தவறுகளால்தான் மின்வெட்டு ஏற்படுவ தாகவும் மின்துறை அமைச்சர் தெரிவித்துள் ளார். ஊழியர்களுக்கு எதிராகக் கூறப்படும் இத்தகைய பொதுவான விமர்சனங்களுக்குப் பின்னுள்ள எதார்த்த



நிலைமைகளை விளக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் தொழிற்சங்கங்களுக்கு உள்ளது.

**தமிழகத்தின் மின் தேவையும் சவால்களும்**

தமிழ்நாடு மின்சார வாரியம், விவசாய மின் இணைப்புகள் உட்படச் சுமார் 3.45 கோடி மின்நுகர்வோருக்குச் சேவை வழங்கி வருகிறது. தமிழ்நாட்டின் சராசரி மின் தேவை 16,000 மெகாவாட் ஆகும். கடந்த ஐந்து ஆண்டுகளில் மின் இணைப்புகள் மற்றும் மின் தேவையின் அளவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

கோடைக் காலங்களில் மின்நுகர்வு உச்சமடைகிறது. கடந்த 02.05.2024 அன்று மின்தேவை 20,830 மெகாவாட்டை எட்டியது. 2025 ஏப்ரல் மற்றும் மே மாதங்க ளில் பெய்த மழையினால் உச்சபட்ச மின் தேவை 19,878 மெகாவாட்டாகக் குறைந்தி ருந்தாலும், கடந்த 21.04.2026 அன்று 21,060 மெகாவாட் என்ற புதிய உச்சத்தை அடைந்துள்ளது. 100 டிகிரி பாரன்ஹீட்டுக்கு மேல் வெப்பம் பதிவாகி வருவதால் மின்தேவை மேலும் கூடுகிறது.



தென்மாநிலங்களில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் மின்பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளதாக ஒன்றிய அரசும், அடுத்த 10 ஆண்டுகளில் (2026-27 முதல் 2036-37 வரை) தமிழ்நாட்டின் மின் தேவை இரண்டு மடங்காக அதிகரிக்கும் என மத்திய மின்சார ஆணையமும் (CEA) எச்சரித்துள் ளன. எனவே, சுயசார்பு மின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கடமை அரசுக்கு உள்ளது.

**மின்வெட்டுக்கான உண்மையான காரணங்கள்**

கோடைக்காலத் தொடர் மின்வெட்டுக்கு அதீத மின் தேவையும், கடுமையான வெப்பத்தால் மின்மாற்றிகள் (Transformers) மற்றும் துணை மின்நிலையங்கள் மிக விரைவில் வெப்பமடைந்து அதிக அழுத்தத் தின் காரணமாக பழுதடைவதுமே காரணங்க ளாகும். மின்கம்பங்கள் மற்றும் மின்கட்ட ணங்கள் தங்களின் அதிகபட்சக் கொள்ள ளவைத் (Over Load) தாண்டும் போது, பாதுகாப்பு நடவடிக்கையாக மின் இணைப்பு தானாகவே துண்டிக்கப்படுகிறது (Tripping).

இவற்றுடன், மாதந்தோறும் செய்ய வேண்டிய மின்மாற்றிகள் பராமரிப்பு, மரக்கிளைகளை அகற்றுதல், புதைவட கம்பிகள் பராமரிப்பு போன்ற பணிகளைச் செய்யப் போதிய பணியாளர்கள் இல்லை. மின்சார வாரியத்தில் அனுமதிக்கப்பட்ட பணி யிடங்கள் 1,40,000 ஆகும். ஆனால், தற்போது 65,000 பேர் மட்டுமே பணி புரிகின்றனர். 75,000 பணியிடங்கள் காலி யாக உள்ளன. குறிப்பாக, மிக முக்கியமான களப்பிரிவிலேயே (Field Staff) 47,000 பணியிடங்கள் காலியாக உள்ளதால், தடையில்லா மின்சாரம் வழங்குவதில் பலவீனம் ஏற்பட்டு, ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்கும் தினந்தோறும் மோதல் உருவாகிறது.

**தீர்வுகள் என்ன?**

மின் விநியோகக் கட்டமைப்பை நவீ னப்படுத்தி விரிவாக்கம் செய்ய வேண்டும். சென்னை, கோவை, மதுரை, நெல்லை, திருச்சி போன்ற பெருநகரங்களில் கூடுத லாகத் துணை மின் நிலையங்களை யும் மின்மாற்றிகளையும் அமைக்க வேண்டும். 40 ஆண்டுகளைக் கடந்து ஆயுட்காலம் முடிந்துவிட்ட பழைய கட்டமைப்புகளைக் கண்டறிந்து உடனடியாக மாற்ற வேண்டும். அனைத்துப் பிரிவு அலுவ லகங்களிலும் பற்றாக்குறையாக உள்ள அத்தியாவசியத் தளவாடச் சாமான்கள் இல்லாமல் மின்நுகர்வோரிடம் கேட்க வேண்டிய நிலை உள்ளதை மாற்றி, தளவாடச் சாமான்கள் உபரியாக இருப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

களப்பிரிவில் மின்தடை நீக்கம், புதிய மின் இணைப்பு போன்ற பணிகளைச் செய்யக்கூடிய களஉதவியாளர், கம்பியாளர் பணி யிடங்கள் 80 சதவீதம் காலியாக உள்ளன. இதனால் மின்வெட்டு ஏற்படும் இடங்களுக்குத் தனித்தனி குழுக்களாகச் சென்று பணிகளைச் சரிசெய்ய முடிவ தில்லை. பிரிவு அலுவலகங்களில் தொலை பேசி இயக்குநர் வேலையைக் கூட உதவி மின்பொறியாளர்களே செய்யும் அவல நிலை தொடர்கிறது. இதன் காரணமாகப் பல பொறியாளர்கள் கடும் மனஅழுத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டு இறந்துள்ளனர்.

எனவே, மின்வெட்டுகளுக்கு ஊழியர்கள் காரணமல்ல, கொள்கைகளே காரணம் என்பதைப் புரிந்து கொண்டு, மின்துறை அமைச்சர் தொழிற்சங்கங்களை அழைத்து அவசரமாகப் பேச வேண்டும். களப்பிரிவின் 47,000 காலிப்பணி யிடங்களை உடனடி யாக நிரப்பினால் மட்டுமே தொடர் மின் வெட்டைச் சரிசெய்து, மக்களுக்குத் தரமான மின்சாரத்தை வழங்க முடியும்.



# சென்னை போக்குவரத்து நெரிசலைக் குறைக்க அறிமுகமாகும் ‘ஐடிஎஸ்‘ திட்டம்!

சென்னை மக்களின் தீராத பிரச்னையாக இருப்பது போக்குவரத்து நெரிசல், இதைத் தீர்க்க ஆகஸ்ட் முதல் நுண்ணறிவுப் போக்குவரத்துத் திட்டத்தை (ஐடிஎஸ்) செயல்படுத்த மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சென்னை மக்களின் தீராத பிரச்னையாக இருப்பது போக்குவரத்து நெரிசல், இதைத் தீர்க்க ஆகஸ்ட் முதல் நுண்ணறிவுப் போக்குவரத்துத் திட்டத்தை (ஐடிஎஸ்) செயல்படுத்த மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சென்னை மாநகராட்சி 42 சதுர கிலோ மீட்டர் பரப்புடையது. இந்தப் பரப்பில் 16 லட்சம் கட்டடங்கள் உள்ளன. இங்கே 1.50 கோடிப் பேர் வசிக்கின்றனர். 35 ஆயிரம் சாலைகளும், 50 ஆயிரம் தெருக்களும் உள்ளன. இவற்றில் 400 சாலைகளில் மட்டுமே போக்குவரத்து நடைபெறுகிறது.

சென்னை மக்களின் தீராத பிரச்னையாக இருப்பது போக்குவரத்து நெரிசல், இதைத் தீர்க்க ஆகஸ்ட் முதல் நுண்ணறிவுப் போக்குவரத்துத் திட்டத்தை (ஐடிஎஸ்) செயல்படுத்த மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சென்னை மாநகராட்சி 42 சதுர கிலோ மீட்டர் பரப்புடையது. இந்தப் பரப்பில் 16 லட்சம் கட்டடங்கள் உள்ளன. இங்கே 1.50 கோடிப் பேர் வசிக்கின்றனர். 35 ஆயிரம் சாலைகளும், 50 ஆயிரம் தெருக்களும் உள்ளன. இவற்றில் 400 சாலைகளில் மட்டுமே போக்குவரத்து நடைபெறுகிறது.

கடந்த 2011 கணக்கெடுப்பின்படி 33.75 லட்சம் வாகனங்கள் இருந்த நிலையில், தற்போது 63 லட்சமாக உயர்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது. மேலும், வெளியூர்களிலிருந்து தினமும் சென்னைக்கு வந்து செல்லும் வாகனங்களும் பெருமளவு அதிகரித்துள்ளன.

அதிகரிக்கும் வாகனங்கள், ஆக்கிரமிக்கப்பட்டுள்ள சாலைகள் என பல்வேறு காரணங்களால் சென்னையில் போக்குவரத்து நெரிசல் என்பது தீர்க்கப்படாத பிரச்னையாகவே உள்ளது. நகரில் போக்குவரத்து நெரிசலால் சுற்றுச்சூழல் மாசுபாடும் அதிகரிப்பது தெரிய வந்துள்ளது.

ஐடிஎஸ் திட்டம்: ஆகவே, சென்னை மாநகராட்சி நிர்வாகம் நெரிசலுக்குத் தீர்வு காணவும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும்

கடந்த 2023 ஆம் ஆண்டு ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகமையின் (ஜிகா) நிதியுதவியுடன் நுண்ணறிவு போக்குவரத்து கட்டமைப்புக்கான 'ஐடிஎஸ்' எனும் திட்டத்தை ரூ.530 கோடியில் தொடங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

அத்திட்டப்படி ஏஐ தொழில்நுட்பத்தை போக்குவரத்து நெரிசலைத் தீர்க்க பயன்படுத்தும் வகையில் உள்கட்டமைப்புகள் மாற்றப்படுகின்றன. தற்போது காவலர்கள் மூலம் செயல்பட்டு வரும் சாலை சந்திப்பு சிக்னல்களில் வாகனங்களை முறைப்படுத்தி அனுப்புவதற்கு இனிமேல் ஏஐ தொழில்நுட்பமே முழுமையாகச் செயல்படுத்தப்படவுள்ளன. அதற்காக 165 இடங்களில் ஏஐ தொழில்நுட்ப சிக்னல்கள் நிறுவத் திட்டமிட்டு தற்போது 112 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. சாலைகளில் வரும் வாகன எண்ணிக்கையைக் கணக்கிட்டு உரிய நேரத்தில் அவற்றை அனுமதிக்கும் வகையில் ஏஐ தொழில்நுட்ப சாதனங்கள் அமைந்துள்ளன.

அதிவேகமாகச் செல்லுதல், விதிகளை மீறுதல் என போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்தும் வகையில் செல்வோருக்கு அபராதம் விதிக்கும் தானியங்கி சாதனம் 10 இடங்களில் அமைக்கத் திட்டமிட்டு தற்போது 4 இடங்களில் தயாராக உள்ளன.

பேருந்து இருப்பிடம் அறியலாம்: நகரப் பேருந்துகள் எந்த இடத்தில் உள்ளது என்பதை அறியும் வகையிலான ஜிபிஎஸ் சாதனம் 2,940 பேருந்துகளில் பொருத்தப்பட்டுள்ளன. அதன்படி, 616 பேருந்து நிறுத்தங்கள், பணிமனை ஆகியவற்றில் பேருந்துகளின் வருகை நிலையை அறியலாம்.

போக்குவரத்து பிரச்னையை உடனுக்குடன் அறிந்து தீர்க்கும் வகையில், ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையம் வேப்பேரியில் கட்டப்பட்டுள்ளது. அங்கிருந்து ஐடிஎஸ் திட்டத்தைக் கண்காணிக்கும் வசதியுள்ளது.



இப்பணிகள் அனைத்தும் ஜூலையில் முடிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளன.

ஆணையர் உத்தரவு: நுண்ணறிவு போக்குவரத்து செயல்பாட்டை வரும் ஆகஸ்ட் மாதத்துக்குள் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக மாநகராட்சி ஆணையர் ஜி.எஸ்.சமீரன் திட்டப் பணிகளை தீவிரப்படுத்த தொடர்புடைய அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், 'ஐடிஎஸ் திட்டத்தை முழுமையாகச் செயல்படுத்தினால், சென்னையின் போக்குவரத்து நெரிசல் பெருமளவு குறைந்துவிடும். சாலை சந்திப்புகளை அகலப்படுத்துதல், விற்பனைக் குழுக்கள் மூலம் சாலையோரக் கடைகளை

முறைப்படுத்துதல் என திட்டங்கள் செயல்படுத்தப்படும்போது நெரிசல் இல்லாத போக்குவரத்தை சாத்தியமாக்கலாம் என்றார்.

மக்களின் எதிர்பாப்பு: இதுதவிர சென்னை மாநகராட்சியில் 15 மண்டலங்களிலும் ஸ்மார்ட் வாகன நிறுத்துமிடங்கள் அமைக்கப்பட உள்ளன. அதற்கான போக்குவரத்து மேலாண்மைக் குழுக்கள் நியமிக்கப்பட்டு வருகின்றன. அவற்றால் சாலையோரம் நிறுத்தப்படும் வாகன பிரச்னைக்கு தீர்வு ஏற்பட்டு நெரிசல் குறையும் என்கிறார்கள் மாநகராட்சி சிறப்பு திட்டப் பிரிவு அதிகாரிகள்.

'ஐடிஎஸ்' திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்: ஐடிஎஸ் எனப்படும் போக்குவரத்துக்கான புதிய நவீன திட்டத்தில், போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதைத் தெரிவிக்கவும், வாகனங்களின் எண்ணிக்கையை அறியவும் 115 இடங்களில் சாதனங்கள் அமைக்கப்பட உள்ளன. நேர வாரியாக வாகனங்கள் கணக்கிடப்பட்டு கட்டுப்பாட்டு அறைக்குத் தெரிவிக்கப்படும்.

குறிப்பிட்ட பகுதிகளில் நெரிசல் மிக்க நேரங்களில் பொதுமக்கள் மாற்றுப் பாதையைப் பயன்படுத்தவும், அவர்கள் அப்பகுதிகளுக்கு எவ்வளவு தொலைவு, எவ்வளவு நேரத்தில் செல்லலாம் எனவும் தகவல்களைத் தெரிவிக்க 17 இடங்களில் ஏஐ தொழில்நுட்ப சாதனங்கள் அமைக்கத் திட்டமிட்டு 6 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. சிக்னல்களில் வாகனங்கள் அதிக நேரம் நிற்பதால் ஏற்படும் காற்று மாசு, இப்புதிய திட்டத்தால் கட்டுப்படுத்தப்படும் எனவும் சுற்றுச்சூழல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.





# அதிமுகவினரை தட்டி தூக்கும் தவெக...

## – விழிபிதுங்கும் எடப்பாடி பழனிசாமி!

தமிழக அரசியலில் கடந்த சில வாரங்களாக அதிகம் பேசப்படும் விஷயமாக அதிமுகவில் இருந்து நிர்வாகிகள் தவெகவுக்கு தாவுவது தான் இருந்து வருகிறது.

முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் எம்எல்ஏக்கள், மாவட்ட நிர்வாகிகள் என பலர் அடுத்தடுத்து தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்து வருவது, அதிமுக வட்டாரத்தில் கவலையை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக சட்டப்பேரவைத் தேர்தல் தோல்விக்குப் பிறகு கட்சிக்குள் உருவாகியுள்ள இக்கட்டான சூழல், எடப்பாடி பழனிசாமிக்கு புதிய தலைவலியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் அவர் அடுத்து என்ன முடிவெடுக்கப் போகிறார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

2026 சட்டப்பேரவைத் தேர்தல் முடிவு கட்சிக்குள் புதிய புயலை உருவாக்கியது. ஆட்சியை மீண்டும் கைப்பற்றும் என்ற நம்பிக்கையுடன் பல ஆண்டுகளாக கட்சிக்காக உழைத்திருந்த முன்னாள் அமைச்சர்கள் மற்றும் முக்கிய நிர்வாகிகள், தேர்தல் முடிவுக்குப் பிறகு தங்களது அரசியல் எதிர்காலம் குறித்து மறுபரிசீலனை செய்யத் தொடங்கியதாக கூறப்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளாக ஆட்சியில் இல்லாத சூழலில், மாவட்ட அளவில் கட்சியை நடத்துவதற்கான செலவுகளை பல முன்னாள் அமைச்சர்களே ஏற்று வந்தனர். தேர்தலுக்குப் பிறகு மீண்டும் ஆட்சி அமைந்தால் அந்த முதலீட்டுக்கு பலன் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் எதிர்பாராத விதமாக தவெக ஆட்சியைப் பிடித்தது, பலரது மனநிலையை மாற்றியமைத்துவிட்டதாக கூறப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக சட்டப்பேரவையில் தவெக அரசுக்கு ஆதரவு அளித்த அதிமுக எம்எல்ஏக்கள் விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

பின்னர் ஏற்பட்ட சமாதான தூதுக்களுக்கு பிறகு சிலர் மீண்டும் எடப்பாடி பழனிசாமி தரப்புக்கு திரும்பினாலும், நான்கு எம்எல்ஏக்கள் தங்கள் பதவியை ராஜினாமா செய்து தவெகவில் இணைந்தனர். இதனால் மதுராந்தகம், பெருந்துறை, தாராபுரம் மற்றும் அம்பாசமுத்திரம் உள்ளிட்ட தொகுதிகள் காலியானது.

இதற்கிடையே முன்னாள் அமைச்சர்களான கடம்பூர் ராஜூ, உடுமலை ராதாகிருஷ்ணன், எம்.சி. சம்பத் உள்ளிட்டோர் தவெகவில் இணைந்தது கூடுதல் பரபரப்பரை உருவாக்கியது. அதுமட்டுமல்லாமல் பல மாவட்ட, ஒன்றிய மற்றும் நகர நிர்வாகிகளும் தவெக நோக்கி நகர்ந்தனர்.

இதற்கு காரணம் தவெகவில் தொடர்ந்து புதிய முகங்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு வருவது, பலரது கவனத்தை திசைதிருப்பியுள்ளது. குறிப்பாக இளைஞர்களுக்கு முக்கியத்துவம்

அளிக்கும் கட்சி என்ற அடையாளத்தை தவெக உருவாக்க முயற்சிக்கிறது. அதேநேரத்தில் அதிமுகவின் மிகப்பெரிய பலவீனமாக தலைமுறை மாற்றம் இல்லாதது சுட்டிக்காட்டப்படுகிறது.

கட்சியின் முக்கிய பொறுப்புகளில் மூத்த தலைவர்களே இருப்பதால், இளம் தலைமுறை யினரை ஈர்ப்பதில் சிக்கல் இருப்பதாகவும் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. சமீப காலங்களில் அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவினரே கட்சிக்குள் இளம் ரத்தம் தேவை என்ற கருத்தை வெளிப்படையாக முன்வைத்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் ஆட்சியை இழந்த நிலையில் இருந்தும் 47 தொகுதிகளில் வெற்றி பெற்று வலுவான எதிர்க்கட்சியாக உருவெடுத்தது. வாக்கு சதவீதத்திலும் தங்கள் வலிமையை தக்கவைத்துக் கொண்டது. இதனால் தற்போதைய விலகல்கள் கட்சிக்கு பின்னடைவை ஏற்படுத்தினாலும், அது அதிமுகவின் அரசியல் அடித்தளத்தை முழுமையாக பாதித்துவிட்டதாக கூற முடியாது என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

அதேசமயம் தவெக தரப்பில் இருந்து தொடர்ந்து அதிமுக நிர்வாகிகளை இழுக்கும் முயற்சிகள் நடைபெற்று வருவதாக கூறப்படுவதால், வரவிருக்கும் இடைத்தேர்தல்கள் மற்றும் உள்ளாட்சித் தேர்தல்கள் இந்த போட்டியை மேலும் தீவிரப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிர்வாக அமைப்பில் மாற்றங்களை மேற்கொள்வாரா, தொடர்ந்து நிகழும் விலகல்களை எப்படி சமாளிப்பார் என்ற கேள்விகள் அனைத்தும் தற்போது எடப்பாடி பழனிசாமியை நோக்கி திரும்பியுள்ளன.

# ஆக்கிரமிப்பை இடித்து நொறுக்கிய மக்கள்!

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அருகே நீர்நிலை ஆக்கிரமிப்புச் சுவரை பொதுமக்களே திரண்டு கடப்பாரையால் இடித்துத் தரைமட்டமாக்கிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அருகே உள்ள ஒரு கிராமத்தில் இருக்கும் முக்கிய நீர்நிலை ஓடையை, தனிநபர் ஒருவர் சட்டவிரோதமாக ஆக்கிரமித்து பெரும் சுவர் ஒன்றை எழுப்பியுள்ளார்.

இந்த ஓடை ஆக்கிரமிப்பு குறித்து அப்பகுதி பொதுமக்கள் வருவாய்த்துறை மற்றும் சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளுக்கு பலமுறை தகுந்த ஆதாரங்களுடன் மனு அளித்துள்ளனர். இருப்பினும், அதிகாரிகள் எந்தவித ஆக்கப்பூர்வமான நடவடிக்கையும் எடுக்காமல் தொடர்ந்து காலம் தாழ்த்தி வந்ததாகக் கூறப்படுகிறது.

ஒன்றுதிரண்ட கிராம மக்கள்: அதிகாரிகளின் அலட்சியத்தால் தீவிர ஆத்திரமடைந்த கிராம மக்கள், தங்களுக்குள் ஒன்று திரண்டு நேரடியாகக் களத்தில் இறங்க முடிவு செய்தனர்.

தங்களது கைகளில் கடப்பாரை உள்ளிட்ட ஆயுதங்களை எடுத்துக்கொண்டு சம்பவ இடத்திற்குச் சென்ற பொதுமக்கள், ஓடையை மறித்துக் கட்டப்பட்டிருந்த ஆக்கிரமிப்புச் சுவரை அக்குவேறு ஆணிவேறாக இடித்துத் தரைமட்டமாக்கினர்.



குறிப்பாய், இப்போராட்டத்தில் கிராமத்தைச் சேர்ந்த பெண் இராணுவப் படைகள் போல பெண்கள் பலரும் முன்னின்று சுவரை இடித்துள்ளனர்.

பொதுமக்களே சட்டத்தை கையில் எடுத்து ஆக்கிரமிப்பை அகற்றியதால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பான சூழல் நிலவியது.

மக்கள் தாங்களாகவே முன்வந்து இந்த ஆக்கிரமிப்புச் சுவரை இடிக்கும் வீடியோ காட்சிகள் தற்போது தந்தி டிவி உள்ளிட்ட சமூக ஊடகங்களில் காட்டுத்தீயாய் பரவி, தமிழகம் முழுவதும் நீர்நிலை ஆக்கிரமிப்புகள் மற்றும் அதிகாரிகளின் செயல்பாடு குறித்த பெரும் விவாதத்தைக் கிளப்பியுள்ளது.






# மின்வாரிய தலைமை அலுவலகத்தில் மாயமான டிஸ்க்குகள்!

## மர்மம் என்ன ?!

சென்னை மின்வாரியத் தலைமை அலுவலகத்தில் ஹார்டு டிஸ்க்குகள் திருடப்பட்ட சம்பவத்தின் பின்னணியில், சிபிஐ விசாரணைக்கு அஞ்சி மின்வாரிய முறைகேடுகளை மறைக்க முயன்ற முக்கியப் புள்ளிகள் மற்றும் மின்வாரிய ஊழியர்களின் திட்டமிட்ட சதி இருக்கலாம் என காவல்துறை தரப்பில் சந்தேகிக்கப்படுகிறது.

இந்த திருட்டு வழக்கில் நேரடியாகப் பொருள்களைத் திருடி விற்றதாக, அங்கு ஒப்பந்த அடிப்படையில் கணினி பராமரிப்புப் பொறியாளராகப் பணியாற்றிய அரக்கோணத்தைச் சேர்ந்த கோபிநாத் (31) மற்றும் பெங்களூருவைச் சேர்ந்த முரளி மனோகர் (32) ஆகியோர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மின்வாரியத்தில் நிலக்கரி கொள்முதல், மின்மாற்றிகள் கொள்முதல், புதிய மின்வழிப்பாதைகள் மற்றும் துணை மின் நிலையங்கள் அமைத்ததில் பல்வேறு முறைகேடுகள் நடந்ததாகக் குற்றச்சாட்டுகள் உள்ளன.

தற்போது மின்மாற்றி முறைகேடு குறித்து சிபிஐ விசாரணை நடத்தி வருகிறது. இந்த விசாரணையில் பிற முறைகேடுகளின் விவரங்களும் வெளியே வர வாய்ப்புள்ளதால், முக்கியத் தடயமாக மாறக்கூடிய தரவுகளைச் சிபிஐயிடம் சிக்காமல் மறைக்கவே இத்திருட்டு அரங்கேற்றப்பட்டுள்ளது என போலீஸார் கருதுகின்றனர்.

தலைமை அலுவலகத்தில் நூற்றுக்கணக்கான கணினிகள் இருந்தபோதிலும், குறிப்பிட்ட ரகசியத் தகவல்கள் அடங்கிய 18 கணினிகளின் ஹார்டு டிஸ்க்குகள் மட்டுமே குறிவைத்துத் திருடப்பட்டுள்ளன. இதனால், மின்வாரிய ஊழியர்களின் துணையின்றி இத்திருட்டு நடக்க வாய்ப்பில்லை எனத் தெரியவந்துள்ளது.

கணினிப் பொறியாளர் கோபிநாத் மற்றும் திருடப்பட்ட பொருள்களைப் பெங்களூருவில் வாங்கிய கடை உரிமையாளர் முரளி மனோகர் ஆகியோர் தனிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொருள்கள் மீட்பு: இவர்களிடமிருந்து மின்வாரியத்திற்குச் சொந்தமான 18 ஹார்டு டிஸ்க்குகள் உட்பட மொத்தம் 34 ஹார்டு டிஸ்க்குகள் மற்றும் 20 ரேம்கள் (ஸிகிவி) மீட்கப்பட்டுள்ளன.

இந்த வழக்கில் உள்ள மிகப்பெரிய சதியை முழுமையாக வெளிக்கொண்டு வர, வழக்கின் விசாரணை சென்னை மாநகர காவல்துறையிடமிருந்து தற்போது சிபிசிஐடி பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்த திருட்டுச் சம்பவத்தின் பின்னணியில் மின்வாரியத்தைச் சேர்ந்த உயர்பதவிகளில் உள்ள யாருக்கெல்லாம் தொடர்பிருக்கிறது என்பது குறித்து சிபிசிஐடி போலீஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆயாம்மா பார்த்த பிரசவம்.. இறந்த குழந்தை

## அரசு மருத்துவர்கள் அலட்சியம்

சென்னை கண்ணகி நகர் அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் இல்லாத நேரத்தில், கர்ப்பிணிப் பெண்ணுக்கு அங்கிருந்த துப்புரவுப் பணியாளர் பிரசவம் பார்த்ததால் குழந்தை உயிரிழந்து பிறந்ததாகக் கூறப்படும் அதிர்ச்சி சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்டீபன் ராஜின் மனைவி மெர்சி (33) என்ற நிறைமாத கர்ப்பிணிக்கு திடீரெனப் பிரசவ வலி ஏற்பட்டுள்ளது. உடனடியாக குடும்பத்தினர் அவரை கண்ணகி நகர் அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். ஆனால், அந்த நேரத்தில் அங்கு தகுதியான மருத்துவர்களோ, செவிலியர்களோ பணியில் இல்லை எனக் கூறப்படுகிறது. இந்த இக்கட்டான சூழலைப் பயன்படுத்தி, அங்கு ஹவுஸ் கீப்பிங் வேலை பார்க்கும் ஆயாம்மாக்கள் இருவர் கையுறை அணிந்து கொண்டு மெர்சிக்கு மருத்துவப் பரிசோதனை செய்து, வெறும் வலி நிவாரண மாத்திரைகளை மட்டும் கொடுத்துள்ளனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக திருவல்லிக்கேணி அரசு தாய் சேய் நல மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்ட மெர்சிக்கு, அறுவை சிகிச்சை மூலம் குழந்தை வெளியே எடுக்கப்பட்ட போது அது ஏற்கனவே உயிரிழந்து பிறந்தது தெரியவந்தது. தற்போது தாய் மெர்சி தீவிர சிகிச்சைப் பிரிவில் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

ஏற்கனவே மெர்சிக்கு பிறந்த முதல் குழந்தையும் இவர்களின் அலட்சியத்தால் குறைப் பிரசவமாகப் பிறந்த நிலையில், தற்போதும் உரிய நேரத்தில் முறையான சிகிச்சை அளிக்காமல் அலட்சியமாகச் செயல்பட்டதாலேயே இரண்டாவது குழந்தையும் உயிரிழந்துள்ளதாக உறவினர்கள் கண்ணீருடன் குற்றம் சாட்டுகின்றனர். இந்த அலட்சியப் போக்கைக் கண்டித்து பாதிக்கப்பட்ட ஸ்டீபன் ராஜ், அவரது உறவினர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் என 300க்கும் மேற்பட்டோர் திரண்டு கண்ணகி நகர் அரசு மருத்துவமனையை முற்றுகையிட்டு, நியாயம் கேட்டு வாசலில்



அமர்ந்து தீவிர மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த கண்ணகி நகர் காவல் துறையினர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த முயன்றனர்.

இந்தத் தாலுகாவில் சுமார் ஒன்றரை லட்சம் மக்கள் வசித்து வரும் சூழலில், கடந்த மாதம் இந்த மருத்துவமனையை ஆய்வு செய்து சமூக ஊடகங்களில் ரீல்ஸ் வெளியிட்டுச் சென்ற சோழிங்கநல்லூர் தொகுதி தமிழக வெற்றிக் கழக சட்டமன்ற உறுப்பினர் சரவணமூர்த்தி அவர்கள் சம்பவ இடத்திற்கு வந்த போது, பொதுமக்களும் உறவினர்களும் அவரைச் சூழ்ந்து கொண்டு முற்றுகையிட்டனர். “அன்றே நீங்கள் போதிய மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் இல்லாததை கவனித்து உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் இன்று ஒரு குழந்தையின் உயிர் போயிருக்காது” என மக்கள் அவரிடம் சரமாரியாகக் கேள்விகளை எழுப்பி தங்களது கோபத்தையும் ஆதங்கத்தையும் வெளிப்படுத்தினர். மக்களின் அடுக்கடுக்கான கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாமல் சட்டமன்ற உறுப்பினர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

24 மணி நேர மருத்துவமனையாகச் செயல்படும் இங்கு, உடனடியாகத் தகுதியான மற்றும் பயிற்சி பெற்ற மருத்துவர்களை நிரந்தரமாகப் பணியமர்த்த வேண்டும் எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.



# 'கொல்லும் ரோபோக்கள்'

## புதிய உலக பேராபத்து

செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தின் மூலம் மனிதர்களின் கட்டுப்பாடே இல்லாமல், தாங்களாகவே இலக்குகளைத் தேடிக் கொல்லும் சுயாதிக்க ஆயுதங்கள் (Autonomous Weapons System) அல்லது "கொல்லும் ரோபோக்கள்" (Killer Robots) உலக ராணுவங்களின் புதிய பேராபத்தாக உருவெடுத்துள்ளன.

முழுமையான ஏஐ கொல்லும் டிரோன் என்பது ஒரு குறிப்பிட்ட தனிப்பட்ட நாட்டிற்கு மட்டும் சொந்தமானது அல்ல. எனினும், இதற்கான ஆரம்பக்கட்ட வடிவங்களை உருவாக்குவதிலும், போர்க்களத்தில் முதன்முதலில் ஏஐ சுயாதிக்கப் பயன்பாட்டைப் புகுத்துவதிலும் முன்னணியில் இருந்த நாடுகள்:

ஐக்கிய நாடுகள் சபையின் (UN) அறிக்கையின்படி, 2020ஆம் ஆண்டு லிபிய உள்நாட்டுப் போரின் போது, துருக்கியின் ஷிஜிவி நிறுவனம் தயாரித்த 'கார்கு2' (Kargu-2) என்ற ஏஐ டிரோன், மனிதர்களின் எந்தவொரு கட்டளையும் இன்றி எதிரிப்படை வீரர்களைத் தாமாகவே 'தேடி வேட்டையாடியதாக' பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுவே உலகின் முதல் ஏஐ சுயாதிக்க டிரோன் தாக்குதலாகக் கருதப்படுகிறது.

நவீன ராணுவ டிரோன் மற்றும் இலக்குகளைத் தானாகவே கண்டறியும் ஏஐ மென்பொருள் தொழில்நுட்பங்களின் அடித்தளத்தை அமைத்தவை அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகளின் பாதுகாப்பு நிறுவனங்கள் ஆகும்.

இந்த டிரோன்களில் ஒருமுறை இலக்கின் விவரங்களை (Target Profile) பதிவேற்றி ஏவி விட்டால் போதும். அதன் பிறகு, மனிதர்களின் ரிமோட் கட்டுப்பாடு இல்லாமலேயே, சிக்னல் கிடைக்காத இடங்களிலும் கூட, கேமரா மற்றும் ஏஐ அல்காரிதம் மூலம் மனிதர்களைத் தேடிப் பிடித்துக் கொல்லும்.


சாதாரண டிரோன்களை 'ரேடியோ ஜாமர்கள்' மூலம் முடக்கிவிடலாம். ஆனால், ஏஐ டிரோன்கள் சிக்னல் துண்டிக்கப்பட்டாலும், தங்களுடைய சுய புத்தியைப் பயன்படுத்தி (On-board AI) இலக்கை துல்லியமாகத் தாக்கும்.

ஏஐ அல்காரிதம்களால் ஒரு சாதாரண குடிமகனுக்கும், கையில் ஆயுதம் ஏந்திய ராணுவ வீரருக்கும் உள்ள வித்தியாசத்தை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. மாற்றுத்திறனாளிகளின் சக்கர நாற்காலியைக் கூட இது ஆயுதம் எனத் தவறாகக் கணித்துத் தாக்கக்கூடும்.

இந்த டிரோன்கள் தவறுதலாக அப்பாவி மக்களைக் கொன்று குவித்தால், அதற்கு யார் பொறுப்பு? நிரலாளரா (Programmer), தயாரிப்பு நிறுவனமா அல்லது ராணுவத் தளபதியா என்ற சட்டச் சிக்கல் உலக நாடுகளை அச்சுறுத்துகிறது.

தற்போது உலகளவில் ஏஐ தொழில்நுட்பத்தை

ஆயுதமாக்கும் தீவிரமான போட்டி நடந்து வருகிறது. தற்போதைய நிலவரப்படி முக்கியமாகப் பயன்படுத்தும் நாடுகள் மற்றும் அமைப்புகள்



உக்ரைன் மற்றும் ரஷ்யா தற்போதைய போர்க்களத்தில் இவ்விரு நாடுகளும் ஏஐ டிரோன்களை மிக அதிகளவில் பயன்படுத்தி வருகின்றன.

உக்ரைன் 'The Fourth Law' போன்ற உள்நாட்டு ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் மூலம் 'ஹார்னெட்' (Hornet), 'பம்பிள்பீ' (Bumblebee) போன்ற ஏஐ மாட்யூல் பொருத்தப்பட்ட டிரோன்களைப் பயன்படுத்தி ரஷ்யாவின் போர் டாங்கிகள் மற்றும் விநியோகப் பாதைகளைத் தாக்கி வருகிறது.

ரஷ்யாவின் கலாஷ்னிகோவ் நிறுவனத் தயாரிப்பான 'கேடியுபிபிஎல்ஏ' (KUB-BLA) போன்ற தற்கொலைப்படை (Kamikaze) டிரோன்கள் ஏஐ மூலம் இலக்குகளைத் தாமாகவே கண்டறிந்து தாக்கும் திறன் கொண்டவை.

அமெரிக்க பாதுகாப்புத் துறை தனது 'ரெப்ளிகேட்டர்' (Replicator) திட்டம் மூலம் பல்லாயிரக்கணக்கான மலிவு விலை ஏஐ டிரோன் கூட்டங்களை (Drone Swarms) உருவாக்கி வருகிறது.

ஏஐ மூலம் இயங்கும் 'இண்டெலிஜென்டைஸ்டு வார்ஃபேர்' (Intelligentized Warfare) தொழில்நுட்பத்தில் சீனா தீவிரமாக முதலீடு செய்து வருகிறது. தைவான் போன்ற பகுதிகளில் கடற்படைக் கப்பல்களை முடக்குவதற்கான ஏஐ டிரோன் கூட்டங்களை சீனா உருவாக்கியுள்ளது.

இந்தியாவும் ஏஐ பாதுகாப்புத் துறையில் வேகமாக முன்னேறி வருகிறது. இந்தியாவின் 'இந்திரஜால் இன்ஃப்ரா' (Indrajaal Infra) போன்ற ஏஐ மூலம் இயங்கும் சுயாதிக்க டிரோன் எதிர்ப்பு அமைப்புகள் மற்றும் உள்நாட்டு ஏஐ போர் டிரோன் தயாரிப்புகள் (உதாரணமாக போர்ச்சுகல் நாட்டுடன் இணைந்து தயாரிக்கப்படும் 'கால பைரவா' ஏஐ காம்பாட் டிரோன்) தற்போது பாதுகாப்புப் படையில் முக்கியப் பங்கு வகிக்கின்றன

இஸ்ரேல், ஈரான், மற்றும் துருக்கி ஆகிய நாடுகள் இந்த அதிநவீன ஏஐ தொழில்நுட்பங்களை தங்களின் ராணுவங்களிலும், பல்வேறு நட்பு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்வதிலும் முன்னணியில் உள்ளன.

இதன் பேராபத்தைக் கருத்தில் கொண்டு, ஐநா சபை (UN) 2026க்குள் இந்த 'கொல்லும் ரோபோக்களுக்கு' சர்வதேச அளவில் சட்டப்பூர்வத் தடை விதிக்க வேண்டும் என்று தீவிரமாக வலியுறுத்தி வருகிறது.

# விஷம் குடிச்சு சாக சொல்லுங்க: தவெக எம்எல்ஏ சாபம்

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி பேரூராட்சி இந்திரா நகர் பகுதியில் பொதுமக்களின் குறைகளை கேட்கவும், ஆய்வுக்காகவும் ஆதரவாளர்களுடன் தவெக எம்எல்ஏ கருப்பையா சென்றார்.



அப்போது அப்பகுதி மக்கள், ''கழிவுநீர் வாய்க்கால், பொதுக் கழிப்பிடம், சாலை மற்றும் மின்விளக்கு வசதிகள் போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தர வேண்டும்.

இதுகுறித்து வாடிப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரிடம் நேரில் முறையிட்டபோது, என் வீட்டு முன்பே கழிவுநீர் தேங்கியுள்ளது. நான் என்ன செய்ய முடியும்' என்று அலட்சியமாகப் பதில் அளித்தார்'' என்றனர்.

இதனால் ஆவேசமடைந்த எம்எல்ஏ கருப்பையா, "அவரை மருந்து (விஷம்) குடித்துச் சாகச் சொல்லுங்க" என்று கூறினார், அதையும் அவரது ஆதரவாளர்கள் வீடியோ பதிவு செய்து, சமூக வலைதளங்களில் வெளியிட்டு இருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

# மின்சாரத் தட்டுப்பாடு; தண்ணீர் இன்றி கருகும் பயிர்கள்

## – வேதனையில் விவசாயிகள்

காவிரி டெல்டா மற்றும் அதன் சுற்றுவட்டார மாவட்டங்களில் மேட்டூர் அணை நீர்வரத்து குறைவால் நிலத்தடி நீரை நம்பி பம்புசெட் மோட்டார்கள் மூலம் தொடங்கப்பட்ட முன்பட்ட குறுவை சாகுபடிப் பயிர்கள், மும்முனை மின்சாரத் தட்டுப்பாடு மற்றும் குறைந்த மின்னழுத்தம் (Low Voltage) காரணமாகத் தண்ணீர் இன்றி கருகும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இதனால் தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களின் 20க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் மிகுந்த வேதனையடைந்துள்ளனர்.

இப்பகுதிகளில் ஏற்பட்டுள்ள மின்சாரப் பற்றாக்குறை மற்றும் விவசாயிகளின் தற்போதைய வாழ்வாதாரப் பாதிப்புகள் விவசாயிகளை கவலைக்கு உள்ளாக்கி உள்ளது.

டெல்டா மற்றும் கொள்ளிடம் ஆற்றை ஒட்டியுள்ள கிராமங்களுக்கு வழக்கமாக வழங்கப்படும் மும்முனை மின்சாரம் (3-Phase Power) தற்போது மிகக் குறைந்த மணி நேரமே வழங்கப்படுகிறது. சில பகுதிகளில் ஒரு நாளைக்கு 2 முதல் 3 மணி நேரமே மின்சாரம் கிடைப்பதாக விவசாயிகள் புகார் கூறுகின்றனர்.

போதிய அளவு மின்சாரம் வராதது மட்டுமன்றி, வரும் மின்சாரமும் குறைந்த மின்னழுத்தத்துடன் (Low Voltage - 400 வோல்ட்டிற்குப் பதிலாக 150-160 வோல்ட் மட்டுமே) வருகிறது. இதனால் ஆழ்துளைக் கிணறுகளில் உள்ள உயர் குதிரைத்திறன் (HP) கொண்ட மின் மோட்டார்கள் அடிக்கடி பழுதடைந்து கருகுகின்றன.

கோடாலி கருப்பூர், அன்னகாரன் பேட்டை, இடங்கண்ணி, சோழமாதேவி, கண்டியங்கொல்லை, விழுதியூர், இரும்புத்தலை போன்ற 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் பயிரிடப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் குறுவை நெற்பயிர்கள், நீர் பாய்ச்ச முடியாததால் நிலங்கள் வெடித்துக் காய்ந்து கருகத் தொடங்கியுள்ளன.

முன்பட்ட குறுவை சாகுபடிக்காக விவசாயிகள் ஏக்கருக்கு ₹30,000 முதல் ₹40,000 வரை கடன் வாங்கிச் செலவு செய்துள்ளனர்.



பயிர்களைக் காப்பாற்ற வேறு வழியின்றி, கூடுதல் செலவு செய்து டீசல் எஞ்சின் மோட்டார்கள் மூலம் தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர். இதனால் சாகுபடிச் செலவு பல மடங்கு அதிகரித்துள்ளதால் சிறு மற்றும் குறு விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நிலத்தடி நீரைப் பயன்படுத்திப் பயிர்களைக் காப்பாற்ற, தினசரி குறைந்தபட்சம் 12 முதல் 14 மணி நேரம் தடையற்ற மும்முனை மின்சாரத்தை அரசு உறுதி செய்ய வேண்டும்.

மின்சாரத் தட்டுப்பாட்டினால் ஏற்கனவே காய்ந்து கருகிய நெற்பயிர்களைக் கணக்கெடுத்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ₹50,000 இழப்பீடு வழங்க வேண்டும்.

தற்போதைய வறட்சி மற்றும் மின் தட்டுப்பாடு சூழலைக் கருத்தில் கொண்டு, விவசாயிகளுக்குத் தேவையான விதை நெல், யூரியா மற்றும் உரங்களை முழுமையான மானிய விலையில் வழங்க வேண்டும்.

பயிர்கள் அறுவடைக்குத் தயாராகும் நிலையில் உள்ளதால், தமிழக அரசும் மின்சார வாரியமும் உடனடியாகத் தலையிட்டு மின் விநியோகத்தைச் சீரமைக்க வேண்டும் என்பதே ஒட்டுமொத்த டெல்டா விவசாயிகளின் அவசரக் கோரிக்கையாக உள்ளது.

# மாவட்ட செயலாளர் தொலைஞ்சி போட்டும்..

## சாபம்விட்ட அதிமுக நிர்வாகி!



சிவகங்கை மாவட்ட ஊராட்சிக் குழு தலைவராக இருந்தவர் பொன். மணி பாஸ்கரன். இவர் சிங்கம்புணரி எஸ்.புதூர் அருகே உள்ள பொன்னடப்பட்டி என்ற ஊரைச் சேர்ந்தவர். சென்னையில் தொழிலதிபராக இருந்து வரும் இவர் கடந்த 2019ல் நடைபெற்ற ஊரக உள்ளாட்சி தேர்தலில் சிவகங்கை மாவட்ட கவுன்சில் 1வது வார்டில் நின்று வெற்றி பெற்றார்.

பின்னர் மாவட்ட சேர்மன் பதவியையும் பெற்றார். அதிமுகவில் மாநில அம்மா பேரவை துணை செயலாளராக பொறுப்பு வகித்து வந்தார். சட்டசபை தேர்தலில் திருப்பத்தூர் தொகுதியில் சீட்டும் கேட்டிருந்தார். ஆனால், கூட்டணி கட்சிக்கு சீட் வழங்கப்பட்டது. இந்நிலையில், அவர் அதிமுகவில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். அவர் தவெகவில் இணைய இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

செய்தியாளர் சந்திப்பின்போது எம்ஜிஆர், ஜெயலலிதா படங்களின் முன்பாக சூடம் ஏற்றியபடி பேசிய பொன். மணி பாஸ்கரன், "ஐயா புரட்சித்தலைவரே... நீங்கள் உருவாக்கிய இயக்கம் இன்று சீரழிந்து கொண்டிருக்கிறது. மக்களுக்காக உழைத்த மாசற்ற தலைவரே, ஏழைகளுடைய வாழ்வுக்காக உழைத்த உத்தமரே... நீங்கள் வங்கக் கடலிலே உறங்கிக் கொண்டிருக்கின்றீர்கள்.

கொஞ்சம் கண்விழித்துப் பாருங்கள். என்னை போன்ற லட்சக்கணக்கான தொண்டர்கள் ஆணிவேராய் தாங்கிப் பிடித்த இயக்கத்தை விட்டுவிட்டு நான் செல்கின்றேன். இன்னும் பல பேரை செல்ல வைத்துவிடாதீர்கள்.

முடிந்தால், பொதுச்செயலாளருக்கு கொஞ்சம் கருணை காட்டுங்கள். எல்லோரையும் அரவணைத்துச் செல்லச் சொல்லுங்கள். குறிப்பாக சிவகங்கை மாவட்டத்தை... இந்த மாவட்ட கழகச் செயலாளரிடமிருந்து, மாவட்ட அவைத் தலைவரிடமிருந்து காப்பாற்றுங்கள் என்று அவருக்குச் சொல்லிக் கொடுங்கள். பாவம் நிர்வாகிகள், பாவம் தொண்டர்கள்.

புரட்சித்தலைவி அம்மா... நான் உங்கள் வீட்டிலே எத்தனை முறை சோறு சாப்பிட்டுருக்கேன். அந்த உணர்வுக்காகத்தான் இந்த வேட்டியைக் கட்டியிருந்தேன். எல்லோருக்குமே தெரியும். பூங்குன்றன் அண்ணனுக்கும் என்னைப் பற்றி நல்லாத் தெரியும். இன்று கூட அவரிடம் பேசினேன், கண்ணீர் வடித்தேன், இயக்கத்தை விட்டுப் போகிறேன் என்று சொல்லி இருந்தேன்.


அம்மா, போதும். நீங்கள் காட்டிய வழியிலே... அதிலிருந்து நான் விடுபட்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இயக்கத்தை விடுபட்டுச் செல்கிறேன். இந்தத் துரோகிகளுக்கு, தண்டனை கொடுங்கள். அவர்களுக்குத் தீர்ப்பு கொடுங்கள். அரசியலிலே அவர்கள் வாழாவெட்டியாகப் போக வேண்டும். இத்தோடு தொலைந்து போகவேண்டும் என சாபமிட்டுள்ளார்.

# தமிழகத்தில் அதிகரித்துவரும் ஆன்லைன் மோசடி...

## - பொதுமக்களே உஷார்

தமிழகத்தில் தற்போதைய காலகட்டத்தில் 'டிஜிட்டல் அரெஸ்ட்' (Digital Arrest), போலியான ஏபிகே லிங்க் (APK Links) மற்றும் சர்வதேச ஆன்லைன் முதலீட்டு மோசடிகள் போன்ற டிஜிட்டல் ஸ்கேம்கள் மிகத்தீவிரமாக அதிகரித்து வருகின்றன.

கோயம்புத்தூர் மாநகர காவல் துறையில் கடந்த ஐந்து மாதங்களில் மட்டும் 200க்கும் மேற்பட்ட ஏபிகே லிங்க் மோசடி வழக்குகள் பதிவாகியுள்ளன. மொபைல் பயனர்களுக்கு வரும் ஆபத்தான செயலிகளின் லிங்க்குகளை கிளிக் செய்வதன் மூலம் இந்த மோசடிகள் அரங்கேறுகின்றன.




இந்தியாவில் போலி ஆவணங்கள் மூலம் பெறப்பட்ட 5,300க்கும் மேற்பட்ட இந்திய சிம் கார்டுகள் மலேசியா வழியாக கம்போடிய மோசடி கும்பலுக்கு விற்கப்பட்டுள்ளது அமலாக்கத்துறை (ED) விசாரணையில் அம்பலமாகியுள்ளது. இந்த சிம்களைப் பயன்படுத்தி இந்தியர்களிடம் கோடிக்கணக்கான ரூபாய் டிஜிட்டல் முறையில் பறிக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூரில் சமீபத்தில் உள்ளூர் தொழிலதிபர் ஒருவரை சிபிஐ அல்லது போலீஸ் அதிகாரி போல மிரட்டி, ரூ.20 லட்சம் வரை டிஜிட்டல் அரெஸ்ட் முறையில் மோசடி கும்பல் பறித்துள்ளது. சென்னையில் இதே போன்ற வழக்கில் ரூ.1 கோடி வரை இழந்த நபரின் புகாரைத் தொடர்ந்து முக்கிய குற்றவாளி கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோத பார்சல்கள் அல்லது பணமோசடி வழக்குகளில் தொடர்பு இருப்பதாகக் கூறி வாட்ஸ்அப் அல்லது ஸ்கைப் வீடியோ கால்கள் மூலம் மக்களை நீண்ட நேரம் மிரட்டி, "டிஜிட்டல் சிறைபிடிப்பு" செய்கிறார்கள்.

கூரியர் டெலிவரி முகவர்கள் போல நடித்து, போனில் 21 போன்ற குறிப்பிட்ட USSD எண்களை டயல் செய்ய வைக்கின்றனர். இதன் மூலம் பாதிக்கப்பட்டவரின் போன் கால்கள் மற்றும் ஓடிபி (OTP) எண்கள் மோசடிக்காரர்களின் எண்களுக்கு ஃபார்வர்டு செய்யப்படுகின்றன.

அதிக லாபம் தருவதாகக் கூறி போலியான டிரேடிங் தளங்களில் பணத்தை முதலீடு செய்ய வைத்து, பின்னர் மொத்தமாக ஏமாற்றி விடுகின்றனர்.

இந்திய சட்டத்தில் எந்தவொரு அரசு அமைப்போ அல்லது காவல்துறையோ வீடியோ கால் மூலம் ஒருவரை கைது செய்யவோ அல்லது டிஜிட்டல் முறையில் சிறை வைக்கவோ முடியாது.

டிஜிட்டல் அரெஸ்ட் மற்றும் சைபர் மோசடிகளைக் கண்டறிந்து தடுக்க சிபிஐ (CBI) மற்றும் சைபர் கிரைம் துறையினர் புதிய ஏஐ (AI) தொழில்நுட்ப உதவிகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

தெரியாத எண்களில் இருந்து வரும் லிங்க்குகளைப் (APK) பதிவிறக்கம் செய்யவோ, வங்கிக் கணக்கு விபரங்களைப் பகிரவோ கூடாது.

நீங்கள் ஏதேனும் ஆன்லைன் நிதி மோசடிக்கு ஆளாகியிருந்தால், உடனடியாக மத்திய அரசின் தேசிய சைபர் கிரைம் போர்ட்டலில் புகாரளிக்கலாம் அல்லது 1930 என்ற உதவி எண்களைத் தொடர்பு கொண்டு பணத்தை முடக்க முடியும்.

Owned and Published by **KALAIVANI MURUGAN** from No.3/74, Road Street, Thimmanacherikuppam Post, Arapakkam, Vellore District, Tamilnadu-632517, Printed at Sekar Offset Printer, No.168/1, Big Street, Triplicane, Chenai - 600 005.
Editor: **G.MURUGAN** Cell: 9003006655

# செய்தியாளர்கள் தேவை !



தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்ட வாரியாக நிருபர்கள், போட்டோகிராபர்கள் தேவை.

**குறைந்தது ஓராண்டு அனுபவமுள்ள செய்தியாளர்கள் தேவை**

# விளம்பரக் கட்டண விவரம்

| அளவு | கலர் | கட்டணம்(ரூ.) |
|---|---|---|
| முழு பக்கம் | வண்ணத்தில் | ரூ. 10,000/- |
| அரை பக்கம் | வண்ணத்தில் | ரூ. 5,000/- |
| முழு பக்கம் | கருப்பு, வெள்ளை | ரூ. 5,000/- |
| அரை பக்கம் | கருப்பு, வெள்ளை | ரூ. 3,000/- |
| உள் அட்டை 2, 3 | வண்ணத்தில் | ரூ. 15,000/- |
| பின் அட்டை 4 | வண்ணத்தில் | ரூ. 20,000/- |

@BHOOTHAKANNADI_CHEITHIGAL

visit us:

bhoothakannadi_cheithigal

bhoothakannadi cheithigal

BHOOTHA KANNADI Tamil Monthly

**பூத கண்ணாடி**

BHOOTHAKANNADI - Tamil Monthly, PRGI Registeration No.148391(TNTAM/2018/75836)


# Thiyagesa Foundation

EDUCATION - HEALTH - WOMEN - CHILD DEVLOPMENT - SOCIAL WORK

ஆதரிக்க
அரவணைக்க..
நிதியுதவி
செய்ய...



**THIYAGESA FOUNDATION**
A/C Number: 164712003000335
IFSC: UJVN0001647
Branch: Kanchipuram
Bank Name: UJJIVAN Small Finance Bank



" BY HIS GRACE HE PROSTRATED HIM SELF"

88848 84299
73734 33515

42/3, Ragavendra Complex, Kalaplampattu Salai, Nedumpuli (Vi),
Panapakkam (P), Ranipettai (Dist), Tamilnadu, India, Pin - 631052
Reg No: 35/2022 | Duraban I'd: TN/2026/0979299 | Pan No: AAETT4460D
e-mail: tthiyagesafoundation@gmail.com